Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop, 259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். T.P: 021 222 7835 Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ.ச. முன்பாக 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் T.P: 021 222 7560 Fax:021 222 7310

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 03 (20.08.2004) வெள்ளிக்கிழமை இதழ் :322

# கண்காணிப்பு குழுவினரின் அசமந்தப் போக்கு

# சர்வதேச கவனத்துக்கு கொண்டுசெல்லப்படும்!

## தேசிய பாதுகாப்பு சபை எச்சரிக்கை

(கொழும்பு)

***திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் புலிகள் புதிய முகாம்களை அமைத்து வருவது தொடர்பாக அறிக்கை தருமாறு கோரியிருந்தும் அதை விளக்கத் தவறியதற்காகவும், முல்லைத்தீவுக் கடலில் புலிகளின் கப்பலைச் சோதனையிட நடவடிக்கை எடுக்காதமை குறித்தும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மீது தேசிய பாதுகாப்பு சபை கண்டனம் தெரிவித்திருப்பதுடன் –***

***இது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளதாகவும் எச்சரித்துள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது***

முல்லைத்தீவுக் கடலில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் படகு தொடர்பாக விளக்கம் தருமாறு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தேசிய பாதுகாப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை முல்லைக் கடலில் இருந்து கிழக்கு நோக்கிச் சென்றுகொண்டிந்த கடற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு –கிழக்கு இணைப்புக்கு எதிராக

## சட்ட நடவழிக்கைக்கு தயாராகும் ஜே.வி.பி!

(கொழும்பு)

அவசர காலச் சட்டத்துக்கு கீழ் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பை அரசாங்கம் நீடித்து வருகிறது. அவசர காலச்சட்டம் அமுலில் இல்லாத வேளையில் இவ்வாறு இணைப்பை நீடிக்கும் அறிவித்தல்களை வெளியிடுவதும் சட்டவிரோதமானது.

இதற்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பதற்குத் 'தயாராக இருப்பதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

'உண்மைச்சமாதானத்தின் எதிரிகள் யார்' என்ற தலைப்பில் தங்காலையில் நேற்று மாலை இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதற்கான பேச்சுவார்த்தையில் ஜே.வி.பி கலந்துகொள்ளப் போவதில்லை. அத்துடன், இந்த நடவடிக்கையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### நிமலராஜன் படுகொலை:

## குற்றப் புலனாய்வுப் பிரிவின் அறிக்கை நீதிமன்றில் தாக்கல்!

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை தொடர்பான குற்றப்புலனாய்வுப் பிரிவின் அறிக்கை நேற்று யாழ்.மாவட்ட நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரியான ரஞ்சித் டி சில்வா இந்த அறிக்கையை நேற்று யாழ்.நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

எனினும், இந்த விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அவரின் ஊடாகவே மேலதிக நடவடிக்கை குறித்து ஆலோசிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை - இந்தக்கொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரும் தமக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டு மெனக் கோரி மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருப்பதால் அது குறித்த விசாரணைகள் விரைவில் நடைபெறவுள்ளதாகவும் தெரியவருகிறது. (ப)

## யாழ்.தளபதியாக தென்னக்கோன் இன்று பதவியேற்கவுள்ளார்!

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படைகளின் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் இன்று பதவியேற்கவுள்ளார் என கொழும்பு இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

யாழ்.படைகளின் கட்டளைத் தளபதியாக இருந்துவந்த மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தொண்டர் படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டதையடுத்தே - மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் இந்தப் பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார்.

திருகோணமலையை தலைமையாகக் கொண்ட 22 ஆவது டிவிசனின் பொதுக் கட்டளை அதிகாரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் கிரனேட் வீச்சு; ஓய்வு பெற்ற அதிபர் பலி!

(திருகோணலை)

மூதூர் நொக்ஸ் வீதியில் நேற்று அதிகாலை இடம் பெற்ற கிரனேட் தாக்குதலில் ஓய்வு பெற்ற பாடசாலை அதிபரான முஸ்லிம் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று அதிகாலை ஒரு மணிக்கு இடம்பெற்ற இந்தக் கிரினேட் வீச்சுத் தாக்குதலில் 61 வயதான ஜஹீர் குட்டி ஜமால்டீன் என்ற ஓய்வு பெற்ற பாடசாலை அதிபரே உயிரிழந்தவராவார்.

குறிப்பிட்ட அதிபர் தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் படுக்கையறையின் ஜன்னலூடாகவே கிரனேட் வீசப்பட்டது.

காயமடைந்த இவர் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சத்திரசிகிச்சை ஒன்றினை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே உயிரிழந்ததாகத தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மீனவர்களுடன் விடுதலைப் புலிகள் சந்திப்பு!

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தலைமையிலான குழுவினர் திருகோணமலை மாவட்ட மீனவர்களைச் சந்தித்து உரையாடினர்.

திருகோணமலை சேனையூர் மக்கள் பொது மண்டபத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் திருகோணமலை மாவட்ட இராணுவத் தளபதி வசந்த், அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், கடற் புலிகளின் தளபதி இனியவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுமார் 300 க்கும் மேற்பட்ட மீனவர்கள் கலந்துகொண்ட இந்தச் சந்திப்பில் உரையாற்றிய கேணல் சொர்ணம் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் – தாழ்வுபாட்டில்

## உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய சடலம்!

மன்னார் தாழ்வுபாடு கடற்கரைக் பகுதியில் இடுப்பிற்கு மேல் இல்லாத ஆணின் சடலம் ஒன்று கரையொதுங்கியது.

இவ்வாறு கரையொதுங்கிய இந்தச் சடலத்தை மன்னார் பொலிஸார் மீட்டெடுத்து மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

மீட்கப்பட்ட சடலத்தில் எந்தவித, தசைத் துண்டுகளும் இல்லாமல் வெறும் எலும்புக் கூடாகவே இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேத பரிசோதனைக்காக மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்தச் சடலத்தை, அங்கு பிரேத பரிசோதனை செய்யமுடியாதென அநுராதபுர சட்டவைத்திய அதிகாரிக்கு அறிவித்துள்ளதாகவும்,

எனவே, இந்தவார இறுதிக்குள் அநுராதபுர சட்டவைத்திய அதிகாரி மன்னார் வைத்தியசாலைக்கு வந்து பிரேத பரிசோதனையை மேற்கொள்வாரெனவும் மன்னார் பொது

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சின்னபாலா கொலையைக் கண்டித்து

## வெளிநாட்டுத் தூதரகங்கள் முன்பாக ஈ.பி.டி.பியினர் நேற்று ஆர்ப்பாட்டம்!



(கொழும்பு)

ஈ.பி.டி.பியின் [illegible] செயலாளரான சின்னபாலா சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கொழும்பிலுள்ள வெளிநாட்டுத்தூதரகங்கள் சிலவற்றுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத் தப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணியளவில் இந்தியத் தூதரகத்துக்கு முன்பாக ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் - அமெரிக்க பிரிட்டிஷ், ஜேர்மன், நெதர்லாந்து தூதரகங்களிற்கு முன்பாகவும் இடம் பெற்றது.

தமது கட்சி உறுப்பினர்கள் படுகொலை செய்யப்படுவதைதடுத்து நிறுத்தக் கோரியும், சின்னபாலா கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன நிறுத்தக் கோரியுமே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரிட்டிஷ், அமெரிக்கத் தூதரகங்களுக்கு சென்ற ஈ.பி.டி.பியினர் அந்த நாடுகளின் தூதரகங்களுக்கு மகஜர்களைக் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாஸன், குணசேகரம் சுதன் உட்பட ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதேவேளை - சுட்டுக்கொல்லப்பட்ட சின்னபாலாவின் இறுதிக் (12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது ஈழநாடு

## இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய = போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவை யொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிக்கான விதிகள்

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைக்ள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப் பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 CM X 4 CM ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரவாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

மத்திய பிரிவு- க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

மேற்பிரிவு - அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள்
அனுப்ப வேண்டிய முகவரி:- நமது ஈழநாடு - 2??, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## கைப்பணிப் பொருட்கள் கண்காட்சி

திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள சைவ வித்தியா விருத்திச்சங்க இல்லச் சிறார்களினால் உருவாக்கப்பட்ட கைப்பணிப் பொருட்கள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகளினது கண்காட்சி இன்று காலை 9.30 மணி முதல் தங்கம்மா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் திருமதி க.தெய்வேந்திரத்தினால் திறந்து வைக்கப்படும். இந்தக் கண்காட்சி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும். (31)

## கருத்துரை

யாழ்.பல்கலைக்கழக புவியியல் கழக ஏற்பாட்டில் இன்று மாலை மூன்று மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் நோர்வே விவசாய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் என்.சண்முகரட்ணம் - 'உலகமயமாக்கலும் அபிவிருத்தி கற்கை நெறிகளும்' என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். எனவே, இதில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு புவியியற்கழகம் தெரிவித்துள்ளது.

## மேசைப் பந்தாட்ட மேசை வழங்கல்

வடக்கு - கிழக்கு கல்வி, கலாசார விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சுடன் யாழ்ப்பாண மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கம் இணைந்து நடத்தும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கான மேசைப் பந்தாட்ட மேசை வழங்கல் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியின் அதிபரும், யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத் தலைவருமான க. இராசதுரை தலைமையில், யாழ்.மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இந்தநிகழ்வில் - வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறைச் செயலர் ஆர். தியாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜூன், மீனா, சுவாதி நடிப்பில்
அன்பு சகோதரன்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
(#-2904)

திறைஞ்சனலஸ் சங்கானை
அரவிந், சோனா, ரகுவரன் நடித்த
கையோடு கை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
ROAD TRIP
(#-2723)

ராஜா யாழ்ப்பாணம்.

கமல், சினேகா நடித்த
வசூல்ராஜா MBBS
விரைவில் விஜய் நடித்த மதுர
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(#-2725)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

### நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால், யாழ். மாவட்டத்துக்கு நிவாரணத்துக்கு வழங்கப்படும் புழுங்கல் அரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

1. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004, மே, யூன் ஆகிய மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து கொள்வனவு செய்து கீழ்க் குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கென கீழ் தரப்பட்டுள்ள தொகை புழுங்கல் அரிசி நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப் படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்துக்கும் வழங்கீடு செய்யப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ. சங்கம் | அரிசியின் அளவு | |
|---|---|---|---|
| | | மே (MT) | யூன் (MT) |
| 01 | சாவகச்சேரி | 190 | 190 |
| 02 | கைதடி | 70 | 70 |
| 03 | கொடிகாமம் | 135 | 135 |
| 04 | உடுப்பிட்டி | 32 | 32 |
| 05 | கட்டைவேலி நெல்லியடி | 45 | 45 |
| 06 | பருத்தித்துறை | 114 | 114 |
| 07 | புலோலி | 27 | 27 |
| 08 | மருதங்கேணி | 80 | 80 |
| 09 | யாழ்ப்பாணம் | 311 | 311 |
| 10 | நல்லூர் | 161 | 161 |
| 11 | அச்சுவேலி | 154 | 154 |
| 12 | நீர்வேலி | 115 | 115 |
| 13 | மானிப்பாய் | 131 | 131 |
| 14 | பண்டத்தரிப்பு | 90 | 90 |
| 15 | அளவெட்டி மல்லாகம் | 64 | 64 |
| 16 | தெல்லிப்பளை | 150 | 150 |
| 17 | சங்கானை | 183 | 183 |
| 18 | சுன்னாகம் | 196 | 196 |
| 19 | புங்குடுதீவு நயினாதீவு | 40 | 40 |
| 20 | வேலணை | 45 | 45 |
| 21 | ஊர்காவற்துறை | 70 | 70 |
| 22 | காரைநகர் | 55 | 55 |
| 23 | தீவகம் | 12 | 12 |
| 24 | நெடுந்தீவு | 30 | 30 |
| | மொத்தம் | 2500 | 2500 |

02. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500 யை யாழ் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்வி படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2004.08.20 திகதி தொடக்கம் 2004.09.09 திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மன்னார் மாவட்ட ப.நோ.கூ சங்கங்களை பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03. மீளளிக்கமுடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500 யை அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்வி படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்வி கோரப்படவுள்ள அரிசி புழுங்கல் அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

05. பூரணப்படுத்திய இரு கேள்வி படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.09.10 பிப 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றையதினம் பி.ப 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்கமுடியும்.

06. கேள்வி பத்திரத்தின் தபால்உறையின் இடதுபக்க மேல் மூலையில் புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி என எழுதப்படல் வேண்டும்.

07. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சகங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

08. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10 வீதம் மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

09. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை, மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

10. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ. பத்மநாதன்**
*தலைவர்/அரச அதிபர்,*
*மாவட்ட கேள்விச் சபை/ மாவட்ட செயலகம்,*
*யாழ்ப்பாணம்.19.08.2004* (C/2955)

# யாழ்ப்பாண மாநகரசபை

## நல்லூர் உற்சவம் 2004 - வீதித்தடை பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கீழ்க்குறிப்பிடப்படும் வீதிகள் 21.08. 2004 ஆம் திகதி தொடக்கம் 16.09.2004 ஆம் திகதி வரை வாகனப் போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும்.

01.
- அரசடிச் சந்திக்கும் 2 ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்;
- பிராமணக் கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச்சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்;
- செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெருவின் அப்பாகம்;

02.
- பேரூந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச்சந்தையூடாகச் செல்லல்;
- பருத்தித்துறை வீதிக்கும், நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதியால் பேரூந்துகளும், சிற்றூர்திகளும் செல்லுவது முற்றாகத் தடைசெய்யப்படும்.

03. வாகனத் தரிப்பிடங்கள்
- முத்திரைச் சந்தைப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியில்;
- கந்தர்மடச் சந்திக்கு அப்பால் அரசடி வீதியில்;
- அம்மன் வீதி - பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியில்;
- செம்மணி வீதியில் பூங்காவுக்கு அப்பால்.

கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(2959)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பகுதி அபிவிருத்தியில் புறக்கணிப்பு

# இரு நாடுகள் என்பதை ஜே.வி.பியும் ஏற்கின்றது

## -சபையில் சிவாஜிலிங்கம் எம்.பி. உரை



தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தியில் ஜே.வி.பியின் அமைச்சுக்கள் பாராமுகமாக இருப்பதும், திட்டமிட்டுப் புறக்கணித்து வருவதும் இலங்கையில் இரு நாடுகள் இருக்கின்றதென்ற உண்மையை ஜே.வி.பியும் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்துவதாக, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில் -

வெளிநாட்டவர் காணிகள் வாங்கமுடியாது என்ற சட்டமூலம் கொண்டுவந்தமை தமிழ்மக்களை வஞ்சிக்கும் செயல். இடம்பெயர்ந்த பெருமளவு தமிழ்மக்கள் வெளிநாட்டுக் குடியுரிமை பெற்றிருக்கின்றனர். இந்த நடைமுறை தமிழ்ப்பகுதிகளின் அபிவிருத்தியைப் பாதிக்கும்.

இதேவேளை சுதேசக் கொள்கை பற்றிப் பேசும் தற்போதைய அரசாங்கம், ஏற்கனவே வெளிநாட்டு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்ட பிறீமா ஆலை, எயர் லங்கா, புத்தளம் சிமெந்துத் தொழிற்சாலை என்பவற்றை மீளப்பெறமுடியுமா?

வெளிநாட்டவர்கள் இந்த நாட்டில் காணிகளைப் பெற்றுக்கொள்ளும்போது அவர்களுக்கு நூற்றுக்கு நூறு வீதம் வரிசெலுத்தும் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வரும் அதேநேரம் -

வடக்கு - கிழக்கில் இராணுவத்தினர் தமிழமக்களின் காணிகளில் அத்துமீறியிருப்பதற்கு வரி எதையும்செலுத்தவில்லை என்பதையும் கருத்திற்கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்தார். (01)

# ஜனாதிபதியின் மாற்றுத்திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும்

## அத்துரலிய ரத்னதேரர் கோரிக்கை

ஜனாதிபதி சமர்ப்பிக்கவுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகள் முதலில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட தீர்வுயோசனைக்கு மாற்றீடான திட்டமொன்றை அரசாங்கம் புலிகளிடம் வழங்கவுள்ளதாகவும், அந்தத் திட்டத்தினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே உருவாக்கவுள்ளதாகவும் அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார்.

அவ்வாறு ஜனாதிபதியால் தீர்வு யோசனை ஒன்று முன்வைக்கப்படவுள்ளதனால் அவரது யோசனைகள் குறித்து முதலில் நாடாளுமன்றில் தெரியப்படுத்தல் வேண்டும்.

அவ்வாறு செய்வதே யாப்பு மரபிற்கு உட்பட்டதாக அமையும் எனத் தெரிவித்தார்.

இவரது இந்த உரைக்கு பிரதமர் சார்பில் பதிலளித்த மைத்திரிபால சிறிசேன - எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் இந்தத் தீர்வுத் திட்டம் குறித்து அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

# யாழ்.மருத்துவ பீட பட்டதாரிகள் தென்பகுதிக்கு வரவே விரும்புகிறார்கள்

## - அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட பட்டதாரிகள் தமது மருத்துவப் படிப்பை முடித்த பின்னர் கொழும்பிற்கு வரவே விரும்புகின்றார்கள். ஆனால், தென்பகுதி வைத்தியர்கள் வடக்கே பணிபுரிகின்றார்கள். இது குறித்து நாம் தென்பகுதி வைத்தியர்களுக்கே நன்றி தெரிவிக்கவேண்டும்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் வைத்திய தேவைகளை அமைப்பதற்கும், மற்றைய வசதிகளை வழங்குவதற்குமே பதவிக்கு வந்தது.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தால் செய்யமுடியாதுபோன தெல்லிப்பளை வைத்தியசாலையை நாம் கட்டியெழுப்புவோம். புற்றுநோய் சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்களை நாம் வழங்குவோம். அது தொடர்பான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (தே)

# படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுக்காது

## பிரதித் தலைவர் ஹொக்லன்ட் தெரிவிப்பு

தமிழ் அரசியல் கட்சி அங்கத்தவர்கள் கொல்லப்படுவது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாதெனவும், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியது பொலிஸார் உட்பட படையினர்தான் என கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்தார்.

வெள்ளவத்தைப் பகுதியில் இடம்பெற்ற ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் சின்னபாலா மற்றும் பிற கொலைச் சம்பவங்கள் தொடர்பாகக் கண்காணிப்புக்குழு என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றதென சிங்கள ஊடகமொன்று அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்வது நன்மைக்கல்ல. இந்தச் சம்பவங்கள் போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதித்துவிடும். அத்துடன் சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் சிக்கல்களைத் தோற்றுவிக்கும்.

எவ்வாறெனினும் இது தொடர்பாக நாம் எதனையும் செய்யமுடியாது. இது குறித்து படையினரே நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# கண்டியில் வைத்துக் கைதான தமிழ் இளைஞர்கள் விடுதலை!

மல்வத்தபீடத்தின் மகாநாயக்கருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவிப்பிரமாணப் பத்திரம் வழங்கும் வைபவம் நடைபெற்ற வேளை, அருகிலுள்ள காட்டுப் பகுதியில் நடமாடியதாகத் தெரிவித்துக் கைதான இரு தமிழ் இளைஞர்களும் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

வவுனியாவைச் சேர்ந்த சி.சத்தியநாதன், பிரசாத் ஆகிய இருவருமே நேற்றுமுன்தினம் கண்டி பொலிஸாரால் விடுவிக்கப்பட்டனர். எனினும் அவர்கள் பயணித்த வாகனம் பொலிஸாரால் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# போஷாக்கு உணவுத் திட்டம் கொழும்பிலும் அறிமுகமாகும்

முதலாம் ஆண்டில் கல்விகற்கும் மாணவர்களுக்கான போசாக்குணவுத் திட்டம் கொழும்பிலும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வசதிகுறைந்த, கிராமியமட்டப் பாடசாலைகளுக்கு மட்டும் தற்போது வழங்கப்பட்டுவரும் இந்தப் போசாக்குணவானது, கொழும்பு மாவட்டத்திலும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட வசதிகுறைந்த பாடசாலைகளே இந்தத் திட்டத்தின்கீழ் போசாக்குணவு வழங்குவதற்காக இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# மாரவில வாவியில் ஏவுகணைகள் மீட்பு

சிலாபம் மாரவில பகுதியில் வாவி ஒன்றிலிருந்து தன்னியக்கி எதிர்ப்பு ஏவுகணைகள் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

மாரவில மட்டக்கொட்டுவ வாவியில மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் தன்னியக்கி ஏவுகணைகள் அடங்கிய பெட்டி ஒன்றினை மீட்டார். மேற்படி பெட்டியினுள் இருந்த ஒரு ஏவுகணையை வாவியில் வீசிவிட்டு ஏனைய ஏவுகணைகளை வீட்டிற்கு எடுத்துச்சென்று புதைத்துள்ளார். ஒவ்வொரு ஏவுகணைகளும் கிலோ எடைகொண்டது எனத் தெரிய வருகிறது.

வாவியிலிருந்து ஏவுகணை மீட்கப்பட்டசம்பவம் தொடர்பாக பொலிசாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற மாரவில பொலிஸார், இருவரைக் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் வர்த்தகர் எனவும், அவர் பிறிதொருவரிடமிருந்து இந்த ஏவுகணையைக் கொள்வனவு செய்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மீட்கப்பட்ட இந்த ஏவுகணைகள் அண்மையில் நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்து விபத்துக்குள்ளான வான்படைக்குச் சொந்தமான மிக் ரக விமானத்திலிருந்த ஏவுகணைகளாக இருக்கலாமென மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

மாரவில பொலிஸார் இது குறித்து விசாரணைகளைத் தொடர்ந்தும் நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

# வாக்களிப்புக்கு அடையாள அட்டை; அடுத்தமாதம் நாடாளுமன்ற விவாதம்

தேர்தலின்போது அடையாள அட்டைகளைப் பயன்படுத்துவது தொடர்பான நாடாளுமன்ற விவாதம் எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கான தீர்மானம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றிய நீதியமைச்சர் ஜோன் செனவிரட்ன-

6 மாத காலப்பகுதிக்குள் நாட்டில் அனைவருக்கும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிததார்.

இதேவேளை இந்தப் பிரேரணையை விவாதத்துக்கு எடுப்பதை மேலும் காலதாமதப்படுத்த வேண்டும் என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன கேட்டுக்கொண்டன.

இது தொடர்பில் அவை பிரதமரை சந்திக்கவும் முடிவெடுத்துள்ளன. தமது பகுதிகளில் 6 மாதகாலப் பகுதிக்குள் அடையாள அட்டைகளை வழங்கமுடியாது என்ற கருத்தையே இவை கொண்டுள்ளன.

## ரயில்வே ஊழியர்கள் மருதானையில் ஆர்ப்பாட்டம்

ரயில்வே சேவைகளைத் தனியார் மயப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து - 300 இற்கும் மேற்பட்ட ரயில்வே ஊழியர்கள் மருதானை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் 32 தொழிற் சங்கங்கள் பங்குபற்றியதாகத் தெரிய வருகிறது. இதில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ரயில்வே அதிகார சபையை மீண்டும் ரயில்வேத் திணைக்களமாக மாற்றவேண்டுமெனவும் -

தமக்குரிய கொடுப்பனவுகளைச் சரியாக வழங்கவேண்டும் எனவும் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ரயில்வே அதிகாரசபையில் 17 ஆயிரம் பேர் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

## 28 ஆயிரம் குற்றச்செயல்கள்

இலங்கையில் இந்த வருடத்தின் முதல் ஆறுமாதகாலப்பகுதியில் மாத்திரம் கொடிய குற்றச்செயல்கள் 28017 நிகழ்ந்துள்ளதாகவும், அவற்றில் ஐம்பது வீதத்திற்கும் அதிகமானவற்றுக்கு எவ்வித தீர்வும் காண இயலவில்லையெனவும் பொலிஸ குற்றவியல் அறிக்கை தெரிவித்தது.

இந்த ஆறுமாதகாலப்பகுதியில் 687 கொலைகள், கடத்தல் சம்பவங்கள் 473, தீவைப்புச் சம்பவங்கள் 508, சொத்துக்களுக்கு நாசம் விளைவிக்கப்பட்ட சம்பவம் 1003, வீடுடைப்புகள் 8244, பாரதூரமான காயம் விளைவித்தல் 921, கத்திக் குத்துக்கள் 2617, கொலை முயற்சிகள் 1732, பெண்கள் மீதான பாலியல் [illegible] 887, [illegible] 25, கொள்ளையடிப்புகள் 3981 என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# இடைக்கால நிர்வாகம் குறித்து தலைவர்களுடன் பேசவேண்டுமாம்

## - உடுவே தம்மாலோக தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை திட்டம் தொடர்பாக அந்த அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் அரசாங்கம் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள், மதத தலைவர்கள் மற்றும் பிறருடனும் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாட்டுக்கு வரவேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

வெளிப்படையாக உரையாடல்களை நடத்திச் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுமானால், அதற்கு விரோதமாகச் செயற்படும் சக்திகளுக்குப் பதில்வழங்க ஜாதிக ஹெல உறுமய முன்வரும் எனவும் அவர் தெரிவித்தார். (தே)



ரயில்வே திணைக்களத்தை தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றுமுன்தினம் மருதானையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திலிருந்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட்மின்டன் தனிநபர் போட்டியில் தங்கம் வென்ற சீன வீராங்கனை



பட்மின்டன் போட்டியில் தங்கம் வென்ற சீன வீராங்கனை ஷில் நில் (நடுவில்)



பெண்களுக்கான ஜிம்னாஸ்டிக் பிரிவில் தங்கம் வென்ற ருமேனிய வீராங்கனை கேடலினா போனர்.






பனிச்சறுக்கல் போட்டியில் வெள்ளி வென்ற சீனா, தங்கம் வென்ற ஹங்கேரி, வெண்கலம் வென்ற அசர்பைஜான் வீராங்கனைகள்



பனிச்சறுக்கல் போட்டியில் தங்கம் வென்ற ஹங்கேரிய வீராங்கனை டயானா இகலி




ஜிம்னாஸ்டிக்கில் தங்கம் வென்ற ரஷ்ய வீராங்கனைகளில் ஒருவரான ஸ்வெற்லானா கோர்கினா



பட்மின்டன் போட்டியில் தங்கம் வென்ற சீன வீராங்கனைகள்

# தடகளப் போட்டிகளில் முதல் தங்கம் ரஷ்யாவுக்கு

(ஏதென்ஸ்)

தடகளப் போட்டிகளில் ரஷ்யாவைச் சேர்ந்த இரினா கார்சனென்கோ முதல் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.


புதன்கிழமை நடைபெற்ற மகளிருக்கான குண்டு எறிதலில் அவர் 21.06 மீற்றர் தூரம் எறிந்து முதலிடம் பெற்றார்.

கியூபாவைச் சேர்ந்த யுமிலெடி கம்பா (19.59 மீற்றர்) இரண்டாம் இடத்தையும், ஜேர்மனின் நாடைன் கினெநெர்ட் (19.55 மீற்றர்) மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

1960 ஆண்டுகளுக்கு முன்பு பழமையான ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற ஒலிம்பியாவில் ஆடவர், மகளிருக்கான குண்டு எறிதல் போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.




# கென்ய வீரர் ஒடும்பேக்கு ஐந்து வருட காலத் தடை!



(நைரோபி)

கிரிக்கெட் தரகர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாக கென்ய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் மொறிஸ் ஒடும்பேக்கு 5 ஆண்டுகள் விளையாட அந்த நாட்டு கிரிக்கெட் சபை தடைவிதித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் தரகருடன் தொடர்பு வைத்திருந்ததாக ஒடும்பே மீது புகார் கூறப்பட்டது. இது தொடர்பாக சிம்பாப்வே உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி அகமட் இப்ராஹிம் தலைமையில் விசாரணை நடைபெற்றது.

நீதிபதியின் பரிந்துரையின் பேரில் ஒடும்பேக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்போவதாக ஒடும்பே கூறியுள்ளார்

## கிரிக்கெட் கழகங்கள்

# யாழ்.மாவட்ட வீரர்களை பதிவுசெய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழக வீரர்கள் சுற்றுப்போட்டிகளில் தாம் அங்கத்துவம் வகிக்கும் கழகத்தினைத் தவிர்த்து ஏனைய கழகங்களில் விளையாடுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்காக கிரிக்கெட் கழக வீரர்களை யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்திடம் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

ஒரு கழக வீரர் இன்னொரு கழகத்துக்கு மாறுவதாயின் - தன்னுடைய கழகத்தின் சம்மதக் கடிதத்துடன் அனுமதி கோரினால் அவர் விலகிய தினத்திலிருந்து 6 மாதங்களின் பின் புதிய கழகத்தில் இணையலாம் எனவும், தன்னுடைய கழக அனுமதியின்றி விலகினால் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கு தகவல் தெரிவித்த நாளிலிருந்து ஒரு வருடத்தின் பின்பே புதிய கழகத்தில் இணையலாம்.

ஒரு கல்வி நிறுவன வீரர் கழகத்தின் பெயரிலும், நிறுவனத்தின் பெயரிலும் தனது பெயரைப் பதிவு செய்யலாம். ஆனால், அவர் சுற்றுப் போட்டிகளில் ஒரு அணியை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தலாம் என யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

மேலும், இந்தப் பதிவுகள் யாவும் இம்மாதம் 25 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (58)

## தாச்சிப் சுற்றுப்போட்டியில் இன்று

(யாழ்ப்பாணம்)

உதைபந்தாட்டப் போட்டியொன்றில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, மயங்கிவிழுந்து மைதானத்திலேயே மரணமடைந்த நாவற்குழி மகா வித்தியாலய மாணவன் செல்வன் குலேந்திரன் மேகலனின் 5 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்த தாச்சி சுற்றுப்போட்டியில் -

கைதடி வளர்மதி 'ஏ' விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தையும், கைதடி துர்க்கா 'பி' விளையாட்டுக்கழகம் 2 ஆம் இடத்தையும், கைதடி வளர்மதி 'பி' விளையாட்டுக் கழகம் 3 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

(31)

## இன்று நடைபெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டிகள

(யாழ்ப்பாணம்)

வதிரி - தேவரையாளி யங் லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு -

கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து டயமன்ஸ் 'ஏ' விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் நண்பர்கள் அணியை எதிர்த்து - கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியும்,

பிற்பகல் 4.30 மணிக்கு விக்ரமன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

(13)

## வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் பல்கலை, யூனியன் அணிகள் வெற்றி!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த 16 ஆம் திகதி யாழ். பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழக அணியினர் பொமேர்ஸ் விளையாட்டுக்கழகத்தை 48-13 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தனர்.

அடுத்து யூனியன் விளையாட்டுக் கழகமும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் யூனியன் விளையாட்டுக்கழகம், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை 27-23 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. (12)

# ஒலிம்பிக் இரட்டையர் ரெனிஸ்; இந்திய ஜோடி அரையிறுதியில்



ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் ரெனிஸ் ஆட்டத்தில் இந்தியா பதக்கம்பெற வாய்ப்புக் கிட்டியுள்ளது. இந்தியாவின் முதல் நிலை வீரர்களான லியாண்டர் பெயஸ் - மகேஷ் பூபதி ஜோடி பங்கேற்கும் காலிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

5 ஆவது இட வரிசையில் இருக்கும் லியாண்டர் பெயஸ் - மகேஷ் பூபதி ஜோடி காலிறுதியில் சிம்பாப்வேயைச் சேர்ந்த வெய்னி பிளாக் - உல்லட் ஜோடியை எதிர்கொண்டது.

இதில் பெயஸ் - பூபதி ஜோடி 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வென்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது. இந்த வெற்றியைப் பெற இந்திய ஜோடிக்கு ஒரு மணி நேரம் தேவைப்பட்டது.

# யாழ்.உதைபந்தாட்ட அணி பிரான்சுக்கு செல்கிறது!

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட அணியொன்று பிரான்சில் நடைபெறவிருக்கும் புலம்பெயர்ந்த தமிழர்களின் ஐரோப்பிய நாட்டு உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையிலான போட்டியில் பங்குபற்றுவதற்குச் செல்லவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்காக, 16 பேர் கொண்ட அணி கடந்த வாரம் பயிற்சியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பிரான்ஸ் செல்லும் அணியுடன் பயிற்றுவிப்பாளர்கள் மூவரும் செல்லவுள்ளனர் என யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ப)

# நீச்சல், படகோட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம்!

கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலய வருடாந்த திருவிழாவையொட்டி, சென்.மேரிஸ் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க அனுசரணையுடன் அண்மையில் கடலக விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

நீச்சல் போட்டி, படகோட்டம், பெண்களுக்கான மரதன் ஓட்டம், கிராம மட்டத்தில் நடத்தப்பட்டது.

போட்டி முடிவுகள் வருமாறு -

**நீச்சல் போட்டி**

முதலாம் இடம் - அ.பிரேமதாஸ், 2 ஆம் இடம் - செ.ஜீவா, 3 ஆம் இடம் - சூ.நிக்ஷன்

**படகோட்டம் (8 குதிரைவலு வெளியிணைப்பு இயந்திரம்)**

முதலாம் இடம் - யே.ஜெகத், 2 ஆம் இடம் - செ.சுதாகரன், 3 ஆம் இடம் - த.பீற்றர் எல்மோ

**படகோட்டம் (15 குதிரைவலு வெளியிணைப்பு இயந்திரம்)**

முதலாம் இடம் - யேமீஸ் ஜீவன், 2 ஆம் இடம் - அ.இராசன், 3 ஆம் இடம் - பி.றஜனி.

**மரதனோட்டம் (பெண்கள்)**

முதலாம் இடம் - செ.மேரிசோபனா, 2 ஆம் இடம் - ல.நிறோப், 3 ஆம் இடம் - எ.அனுசியா. (21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா கும்பாபிஷேகம்

இணுவில் சிவகாமி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. கிரியா நிகழ்ச்சிகள் இன்றும், நாளையும் நடைபெறும்.

## வேலை வாய்ப்புக் கடன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில்துறைப் பயிற்சியின் சித்தியடைந்த மாணவர்கள் 50 பேருக்கு முதற்கட்டமாக இரண்டு இலட்சம் ரூபா வரையான வங்கிக்கடன் திறன் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுயதொழில் வேலை வாய்ப்பு ஆரம்பிப்பதற்கு வழங்கப்படவுள்ளது.

## வடமராட்சி கிழக்கில்

# வெடிபொருட்கள் அகற்றும் பணி முழுமையாகப் பூர்த்தியடையவில்லை

வடமராட்சி கிழக்குப் பிரதேசக் கிராமங்களில் கண்ணிவெடி, மிதிவெடிகள், வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் முழுமையாக முடிவடையவில்லை.

மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையான கடற்கரையோரக் கிராமங்களிலும், மருதங்கேணி தொடக்கம் புதுக்காடு வரையும் மற்றும் ஏ9 வீதியிலும் பாரிய இராணுவ முகாம்கள் அமைந்திருந்தன.

இவை அமைந்துள்ள பகுதிகளுக்கு அண்மையில் பனம்பழம் பொறுக்க, விறகு எடுக்கச் சென்ற பலர் கால்களை இழந்துள்ளனர்.

மிதிவெடி, கண்ணிவெடி அபாய எச்சரிக்கை அறிவித்தல், கம்பிவேலிகளை அந்தப் பகுதிகளிலிருந்து பொது மக்கள் அகற்றியமையால் மீண்டும் வெண்புறா, யுனிசெவ் நிறுவனத்தினர் வீதியோரங்களிலும் முகாமை அண்டிய பகுதிகளிலும் கண்ணிவெடி அபாய எச்சரிக்கை அறிவித்தல் பலகைகளை புதிதாக நாட்டியுள்ளனர். (21)

## மஹோற்சவம்

நவாலி கிழக்கு ஸ்ரீ அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது.

29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

பத்து நாட்களும், திருவிழாவும் அபிஷேக ஆராதனைகளும் அன்னதானமும் நடைபெறும். (21)

* * *

மண்டைதீவு - திருவெண்காடு சித்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் இன்று பகல் 10.20க்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

வேட்டைத்திருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், தேர்த்திருவிழா சனிக்கிழமையும், தீர்த்தத்திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

# தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

தொண்டமனாறில் முன்னர் அமைந்திருந்த ஆசிரியர், மாணவர்களுக்கான குறுகிய காலவதிவிட பயிற்சி நிலையம் இராணுவ நடவடிக்கை காரணமாக முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இந்த நிலையத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக இந்த நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினர் அற்புதநாதன் கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்து ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் வதிவிடத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அற்புதநாதன், பேராசிரியர் கே. சின்னத்தம்பி, பேராசிரியர் கே.சித்திரவடிவேல், பாரதி பதிப்பக உரிமையாளர் சங்கர் ஆகியோர் கொண்ட குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது.

இந்தக் குழுவினர் இந்த நிலையம் அமைப்பதற்குரிய ஆரம்ப நடவடிக்கையாக காணி கொள்வனவு செய்தல் மற்றும் கட்டுமானப் பணிகள் ஆரம்பித்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையம் மீண்டும் யாழ்ப்பாணத்தில் கட்டியெழுப்பப்படுவதன் மூலம், ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் பயனடைவர் என இந்தக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (21)

# கைதடி முதியோர் இல்ல கட்டடத் திறப்பு விழா

(கைதடி)

கைதடியில் இயங்கும் அரச முதியோர் இல்லத்தில் புதிதாக அமைக்கப்பட்ட புதிய விடுதியும், அரச சிறுவர் இல்லத்துக்கான புதிய கட்டடத்தொகுதியும் இன்று திறந்து வைக்கப்படவுள்ளன.

சமூக நலத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் ரஞ்சினி நடராஜபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன், நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு. தெய்வேந்திரம், புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநலன் அமைச்சுச் செயலாளர் வே. பொ. பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(24,25,31,44)

# பல்கலைக்கழக அபிவிருத்திக்கு 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவர் தெரிவிப்பு

நாட்டில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற அதே அளவு நிதி எதிர்வரும் காலங்களில் யாழ். பல்கலைக்கழகத்துக்கும் ஒதுக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுதியளித்துள்ளது.

அண்மையில் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுக்கும், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் இந்த உறுதியை வழங்கினர்.

பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதிக்கும், யாழ். பல்கலைக் கழகத்துக்கென ஒதுக்கப்படும் நிதிக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் இருப்பதாக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் மோகனதாஸ் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர், முதற்கட்டமாக 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் இனிவருங்காலத்தில் சமஅளவிலான நிதி ஒதுக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

இதேவேளை, யாழ். பல்கலைக் கழகத்தில் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு இடவசதி குறைவாக இருப்பதாக துணைவேந்தர் தெரிவித்தார். யாழ்ப்பாணச் சமூகத்தின் எதிர்கால கல்வி மேம்பாட்டை கருத்திற்கொண்டு பொதுமக்கள் யாழ். பல்கலைக்கழகத்துக்கு தேவையான காணியை அன்பளிப்புச் செய்ய வேண்டுமென துணைவேந்தர் கோரிக்கை விடுத்தார். (லெ)






யாழ். மத்திய கல்லூரியின் தமிழ்த்தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கலாநிதி செ.திருநாவுக்கரசு உரையாற்றுவதையும், புதிதாக தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட மாணவத் தலைவருக்கு கல்லூரி அதிபர் இராஜதுரை சின்னம் சூட்டுவதையும் படங்களில் காணலாம்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : க. யோணகான்
முகவரி : மெமோறியல் லேன், மானிப்பாய்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :----------------
முகவரி :----------------
பிறந்த ஆண்டு:----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

# பிறப்பு - இறப்பு பதிவு அலுவலகத்தில் பெரும் ஆளணிப் பற்றாக்குறை

யாழ். செயலகத்தில் பிறப்பு, இறப்புப் பதிவுத் திணைக்களத்தில் ஆளணிப்பற்றாக்குறை நிலவுகின்றது.

யாழ். செயலகத்தில் பிறப்பு, இறப்பு பதிவு தொடர்பான நடவடிக்கைகளை வேகமாக மேற்கொள்ளத் தேவையான ஆளணிகள் இல்லாதிருப்பதாக பிறப்பு, இறப்பு பதிவுத் திணைக்களத்தைச் சேர்ந்த காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்டப்பதிவாளருமான பி. ஈஸ்வரதாசன் தெரிவித்தார்.

இங்கு தொண்டு அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்கள் சிலரைக் கொண்டே தற்போது பிறப்பு, இறப்பு பதிவு தொடர்பான செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சட்டமாணி கற்கைநெறிக்கான

# விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ். பல்கலைக்கழகத்தில் சட்டமாணிக் கற்கை நெறியைப் போதிப்பதற்கான விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தில் 2004/2005 கல்வியாண்டில் சட்டமாணிக் கற்கை நெறிக்கு 50 மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கு சட்டக் கற்கை நெறியைப் போதிப்பதற்கு தேவையான விரிவுரையாளர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் இன்மையால் சட்டமாணிப் பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. (லெ)

# அந்தணரல்லாத பூசகர்களுக்கு கதிர்காமத்தில் வதிவிடப் பயிற்சி

அந்தணரல்லாத இந்து பூசகர்களுக்கான வதிவிடப் பயிற்சி நெறியொன்று எதிர்வரும் 26ஆம் திகதி காலை 9 மணிக்கு கதிர்காமம் தெய்வானை அம்மன் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

விஷ்வ ஹிந்து பரிஷத் இலங்கைக் கிளை நிர்வாகமும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைகளமும் இணைந்து நடத்தும் இந்தப் பயிற்சி நெறியில், பங்குபற்ற விரும்பும் பயிற்சியாளர்கள் கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியில் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சியில் பங்கு பற்றுபவர்கள் நேரடியாகக் கதிர்காமம் சென்று பயிற்சிகளை மேற்கொள்ளலாம். யாழ். குடாநாட்டிலிருந்து பயிற்சி பெறுபவர்களுக்கான கடிதங்கள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# சின்னஞ் சிறு செய்திகள்

## அடையாள அட்டை கையளிப்பு விழா

சலன சித்திரம் அமைப்பின் திரைப்படத் தொழில்நுட்பச் சான்றிதழ் அங்கத்தவ அடையாள அட்டை கையளிப்பு விழா நாளை மறுதினம் பிற்பகல் 2 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சட்டத்தரணியும், அதிதி விரிவுரையாளருமான பொன். பூலோகசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் வி.பி.சிவநாதன், பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக உயர் பட்டப் படிப்புக்கள் கல்லூரி இயக்குநர் அருள்நங்கை சண்முகநாதனும், பிரபல திரைப்பட இயக்குநர் எஸ். ஞானரதனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஆன்மீக சொற்பொழிவு

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" எனும் பொருளில் சைவப் புலவர் க.நித்தியசசிதரன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## வரலக்ஷ்மி விரத உற்சவம்

வரலக்ஷ்மி விரதத்தை முன்னிட்டு வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

விரத நூல்பெறவிரும்பும் அடியார்கள் முன்கூட்டியே தங்கள் பெயர் நட்சத்திரங்களை தேவஸ்தான காரியாலயத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு ஆதீன மகா சபையினர் அறிவித்துள்ளனர்.

## வதிவிடப் பயிற்சி பட்டறை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளின் பொது நூலகங்களில் கடமையாற்றும் நூலகர்கள், நூலக உதவியாளர்கள் பணியாளர்களுக்கான வதிவிடப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில் வடகிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் யாழ். பொது நூல்நிலைய கேட்போர் கூடத்தில் நடத்த திட்டமிட்டுள்ளது.

பங்குபற்ற விரும்புபவர்கள் வடகிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்துடன் உடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# வீண் சந்தேகம்... விபரீதத்தில் முடிவுலாம்

ஒரு பெண் பூப்படைவதற்கு முன்னால் பெற்றோரால் வளர்க்கப்படுகின்ற முறையும், பூப்படைந்த பின்னால் வளர்க்கப்படுகின்ற முறையும் வேறுபாடானது என்பது மறுக்க முடியாத உண்மை.

பூப்படைந்த கையோடு ஒவ்வொரு பெண்ணின் "ரீன்ஏஜ்" பருவமும் ஆரம்பமாகின்றது. "ரீன்ஏஜ்" பருவம் என்பது உண்மையிலேயே கத்தி முனையில் நடக்கும் பருவம் தான். இதில் ஏற்படும் பருவமாற்றத்தின் உந்து சக்தியால் பெண்ணின் மனது கற்பனை உலகில் சிறகடித்துப் பறக்கிறது.

எதிர்ப்பாலாருடன் அளவளாவுவதற்கும், அவர்களுடன் நட்புணர்வை வளர்த்துக் கொள்வதற்கும் மனம் படாதபாடு படுவதைத் தவிர்க்க முடியாதது.

ஒவ்வொரு பெற்றோருக்கும் இந்தக் காலப்பகுதியில்....

சீறும் பைக்கின் பின்சீட்டில்
டி - ஷர்ட் பெண்ணைப் பார்க்கையிலே
கண்கள் இமைக்கும், படம் விரியும்.
சாலையில் கவனம் தடுமாறும்
விரட்டிச் சென்று மறுபடியும்
கிட்டே பார்க்கத் தோன்றும்
சிக்னல் விழுந்து பைக் விரைய
மனசுள் ஏதோ குறுகுறுக்கும்
ரீன்ஏஜ் மகளும் போவாளோ
யாரோ ஒருத்தன் பின்னாடி

இதுபோன்ற சந்தேக எண்ணம் வருவது இயல்பானதுதான். ஏனென்றால் ஒவ்வொரு பெற்றோரும் தமது பெண்பிள்ளைகளை வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டுதான் வளர்க்கின்றார்கள்.

முதலில் பெற்றோர்கள் பிள்ளைகள் மீது நம்பிக்கை வைக்கவேண்டும். ஆனால், அது அளவுக்கு அதிகமாகவும் இருக்கக் கூடாது. இந்தக் காலப்பகுதியில் அவர்களுடன் முரண்படாமல் பெற்றோர்கள் ஓரளவுக்கு அனுசரித்துப்போகத்தான் வேண்டும்.

நல்லது கெட்டதை அறியாத இந்தப் பருவத்தில், சில புரியாத புதிர்களை அவர்கள் சரியாக உணராமல், சுற்றித்திரிவார்களாதலால், தெரியாத அவற்றைப் பெற்றோர்கள் விரிவாகச் சொல்லி, அவர்கள் வாழ்வு சரியாமல் போவதைத் தடுக்கவேண்டும்.

அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகளை விதிப்பதும், எதற்கெடுத்தாலும் சந்தேகப்பட்டு விசாரிப்பதும் அவர்களின் மனதை சஞ்சலப்படுத்த வைத்துவிடும்.

மேலும் அவர்களுடைய ஒவ்வொரு செயல்களையும் அவதானித்து அவற்றைப் புதுக் கண்ணோட்டத்தில் நோக்கினால், முடிவு எதிர்மறையான விளைவுகளையே உண்டு பண்ணும் என்பதற்கு... நீலாவின்

தாவணியின் தலைப்பை
விளையாட்டாய் முறுக்கும்போதும்...
கோயிலுக்குப் போகும்போது
கூடுதலாய் அலங்கரிக்கும் போதும்
தனியாக அமர்ந்து
பாடங்களை மனனம்
செய்யும் போதும்...
அவனை நினைத்தே
அவ்வளவும் செய்வதாய்
அடித்து விட்ட தந்தையே!
நீ அடித்த பிறகுதானப்பா
நான் அவனையே நினைத்தேன்.

இந்தக் கவிதை சிறந்த உதாரணம். கூண்டுக்குள் இருக்கும் கிளி சுதந்திரத்தை நாடி எப்படி வெளியே போகத் துடிக்குமோ அது போல் வீட்டில் அடங்கி ஒடுங்கிப் போகும் பெண்களும், எதிர்ப்பாலாருடனான வானவில் போன்ற நிரந்தரமற்ற சிநேகிதங்களாலும், சில்மிஷங்களாலும் கவரப்பட்டு, தவறான முடிவுகளை எடுத்து, எதிர்கால வாழ்வைச் சீரழித்துக் கொள்வதும் இந்தக் காலத்தில் தான்.

எனவே, ஒவ்வொரு பெண்ணுக்கும் 'ரீன்ஏஜ்' பருவம் மிக முக்கியமானது. இதில் வாழ்வைத் தொலைத்தவர்கள் அதை மீளப்பெறுவது இயலாத காரியம். மேலும் வாழ்க்கையில் சந்தேகம் என்ற புற்றுநோய்க்கு மருந்து கிடையாததால், அது உள்ளிருந்து உயிரை அரித்துக் கொண்டே இருக்கும். அதனால், சந்தேகம் வந்து விட்டால், சந்தோஷம் போய்விடும் என்பதை மனதில் இருத்தி வைப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும். - சர்மினா -

# ஸ்ரிக்கர் பொட்டின் ஆதிக்கம்

தமிழர்களின் பாரம்பரியத்தில் பொட்டு ஒரு முக்கிய இடத்தை வகித்து வருகின்றது. ஆனால், இன்று ஸ்ரிக்கர் பொட்டுக்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளதால், பாரம்பரியமாகப் பெண்கள் அணியும் குங்குமம் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றது. நவீன காலத்துக்கு ஏற்ற விதம்விதமான ஸ்ரிக்கர் பொட்டுக்கள் பயன்பாட்டுக்கு வந்தால், பெண்களும் இதனை விரும்பி வாங்கிப் பயன்படுத்துகிறார்கள்


சில ஆய்வுகளில், ஸ்ரிக்கர் பொட்டில் இரசாயனங்கள் கலந்த பசை தோல் நோயை உண்டாக்கக் கூடியது என தெரியவருகின்றது. முன்பு பாக்குமரத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒருவித பசை பயன்படுத்தப்பட்டதால் எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இப்போது இரசாயனப் பொருட்கள் கலக்கப்படுவதால் தோல் நோய்கள் உண்டாகின்றன என ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

செயற்கைப் பசை காரணமாகப் பொட்டு வைக்கும் இடத்தில் கடிச்சல் ஏற்பட்டு தோல் சிவந்து பின்னர், நாளடைவில் நிறமற்றுப் போவதுடன் தழும்பு ஏற்பட்டுவிடுகிறது.



செயற்கைப் பசையில் உள்ள இரசாயனப் பொருட்கள் நோய்த் தொற்றை ஏற்படுத்தக் கூடிய காளான்களுக்கு நல்ல ஊட்டச்சத்தாக அமைவதால் தோலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் காளான்களின் ஆயுளை நீடிக்கக் காரணமாகிவிடுகிறது. பல ஆண்டுகள் தொடர்ந்து ஸ்ரிக்கர் பொட்டைப் பயன்படுத்தினால் தோல் நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. ☆

# வீட்டை அழகாக வைத்திருக்க



ஆடம்பரமான, விலை கூடிய பொருட்களைக் கொண்டுதான் ஒரு வீட்டை அலங்கரிக்க வேண்டும் என்பதில்லை. எளிமையான விலைகுறைந்த எத்தனையோ முறைகளைப் பயன்படுத்தி, எமது வீடுகளை நாம் அலங்கரித்துக் கொள்ளமுடியும். அந்தவகையில் வீடுகளின் அலங்கரிப்பில் செடிகளுக்கு எப்போதுமே ஒரு முக்கிய பங்கு உண்டு. காரணம் விலையில் இவை மலிவானவை என்பது மட்டுமல்ல, அழகையும் மனதுக்கு மகிழ்ச்சியையும், உடல் ஆரோக்கியத்தையும் தரக் கூடிய இயற்கையான அலங்கரிப்பு இவை என்பதாலும்தான்.

வரவேற்பறை பெரிதாக இருக்கிறதே, நிறைய அலங்காரப் பொருட்கள் வேண்டுமே, போதுமான தளபாடங்கள் இல்லையே என கவலைப்படுபவர்கள், செடிகளை அங்கு வைத்துவிட்டால்போதும். எளிமையான அந்த இடம் ஆடம்பரமாகவும், அழகாகவும் மாறிவிடும்.

பூச்சாடிகள், தொட்டிகளில் வளர்க்கக் கூடிய இந்த வகைச் செடிகளை, எமது வரவேற்பறையில் சரியான இடத்தில் வைப்பதன் மூலம் அறையின் அழகை மேலும் அதிகப்படுத்திக் காட்டமுடியும். விலை குறைந்த செடிகளைக்கூட சரியான, அழகான தொட்டிகளில் வைப்பதன்மூலம், அதன் அழகை மேலும் மெருகூட்ட முடியும்.

தரையில், யன்னல் அருகில் அல்லது ஊஞ்சல் போல தொங்கவோ விடலாம். வேண்டாத பொருட்களை அடைத்து வைக்கும் இடங்களில் கூட இரண்டொரு செடிகளை வைப்பதன் மூலம் அந்த இடத்தை அழகாக்க முடிகின்றது.

வீட்டுக்குள் விழும் அதிக வெளிச்சத்தைக் கட்டுப்படுத்தி, குளிர்மையான சூழ்நிலையை இந்தச் செடிகள் உருவாக்குகின்றன. மேலும் வீட்டுச்சுவர், வரவேற்பறைத் தளபாடங்கள் போன்றவற்றின் நிறங்களோடு கலந்து அறைக்கு புதுவித நிறக்கலவையைக் கொடுத்து, புத்துயிர் பெறவும் செய்கின்றன.

வீட்டினுள் செடிகளை வைக்கும் பொழுது சில அடிப்படை விடயங்களை மனதில் கொண்டால் அதை மேலும் அழகாக மாற்றமுடியும். குறிப்பாகச் செடிகளின் தரம் இவற்றின் அடிப்படையில் தான் அதை வைக்கும் இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உதாரணமாக - ஒரே நீள வரிசையில் எல்லா செடிகளையும் வைக்காமல், உயரப்படி பிரித்து வைக்கலாம்.

அதேபோல் இலைகளின் அமைப்பையும் பார்க்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைக்கப்படும் செடிகள் ஒரே மாதிரி அடர்த்தியாக இருக்கிறதா? என்பதையும் கவனிக்க வேண்டும்.

அடுத்தது நிறக்கலவை. குறிப்பாக குறோட்டன்ஸ செடிகளின் இடையில் பச்சை, வெள்ளை, மண்நிறம் கலந்து வர்ணம் செய்தது போன்று சில வகைச் செடிகள் இருக்கின்றன. அதன் அமைப்புக்கள் நிறக்கலவைப்படி, செடிகளைத் தனித்தனியாக பிரித்துக் கொண்டும் ஒழுங்கமைக்கலாம்.

ஒரே இடத்தில் தொடர்ந்து செடித் தொட்டிகள், பூச்சாடிகளை வைத்தால் வீட்டுத் தரை பாழாகிவிடும் வாய்ப்புக்குள்ளது. அதனால் அவ்வப்போது சற்று நகர்த்தி வைக்க வேண்டும். அல்லது வேறு இடத்துக்கு மாற்றி வைத்து அறைக்கு அழகு கொடுக்கலாம்.

அத்துடன், செடிகளை அவ்வப்போது அழுக்கு மற்றும் தூசு நீங்க துடைத்துவிட வேண்டும். படுக்கை அறையில் செடிகளை வைக்கக் கூடாது. இரவில் இவை காபனீர் ஒட்சைட் வாயுவை வெளியிடும். இதனால் எமக்கு சுத்தமான காற்றை சுவாசிக்க முடியாமல் போய்விடும்.

எந்தச் செடியாக இருந்தாலும் நாம் அதை எமது குடும்ப உறுப்பினர் போல் நினைத்து வளர்த்தோமானால் அது பச்சைப் பசேலென்று எம்மையும் பூரிக்க வைக்கும். ✤

# சிநேகிதிக்கு ஒரு மடல்



## அன்புள்ள சிநேகிதியே

அனைத்து விடயங்களிலும் பெண்கள் தலையை நுழைப்பது பெண்மை என்ற இயல்பினை மாற்றிவிடுமென நீ எழுதிய மடல் கிடைக்கப்பெற்றேன்.

நண்பியே, உன்னைப்போன்ற பெண்களால்தான் இன்று எமது கீழைத்தேயப் பெண்கள் மேலைத்தேயப் பெண்களது வளர்ச்சியை எட்டிப் பிடிக்க முடியாமல் இருக்கின்றார்கள்.

நண்பியே நீ பெண்மை என எதனைக் கருதுகின்றாய்? பெண்மை என்பது பற்றி நீ கூறும் வரைவிலக்கணம் என்ன?

எந்தப் பெண் குழந்தையும் பிறக்கும்போது பெண் என வரையறுக்கப்பட்ட இயல்புகளுடன் பிறப்பதில்லை. நமது சமூகம் சில வரையறைகளைப் போட்டு பெண் என்றால் இப்படித்தான் வாழவேண்டும் எனத் திணித்துள்ளது. பெண்களை இந்த வரையறைகளுக்குள் அடங்கிப் போகச் செய்வதற்காக இதற்குப் பெண்ணியல்புகள் என முத்திரையும் குத்திவிட்டது உங்கள் சமூகம்.

நண்பியே ஆணும், பெண்ணும் ஒத்த இயல்புடையவர்களாகவே பிறக்கின்றார்கள். அவர்கள் வளர்க்கப்படும் முறைதான் அவர்களை முடங்கிப் போகச் செய்கின்றது. இதை உணராது, உன்னைப் போன்ற பெண்கள் இது ஆண்களுக்கே உரியது, அத்தகைய விடயங்களில் பெண்கள் தலையிடக்கூடாது என எண்ணுவது மிகவும் வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

நண்பியே உன்னிடம் சில வினாக்களை வினாவ விரும்புகிறேன். உங்களது இலக்கியங்களிலே வருகின்ற வீரப்பெண்கள் எல்லாம் பெண் இயல்பு அற்றவர்களா?

முதல் நாள்போரிலே தன் கணவன் இறந்துவிட, கணவனது வேலை-தன் பால்மணம் மாறாத பாலகனது கையிற் கொடுத்து, 'சென்று வா மகனே சென்று வா. உன் தந்தையைக் கொன்ற பகைவனை வீழ்த்தி, அவன் குருதியால் செந்தூரப் பொட்டிட்டு வா' எனப் போர்க்களம் அனுப்பிய புறநானூற்றுத்தாய் பெண்ணியல்பு அற்றவளா?

பாண்டிய மன்னனது தவறினால் தனது கணவன் வெட்டுண்டு இறந்தபோது மன்னனது அரண்மனைக்குச் சென்று பாண்டியனிடம் நீதிகேட்ட கண்ணகி பெண்ணியல்பில் இருந்து மாறுபட்டவளா? இன்னும் எத்தனையோ உதாரணங்களை என்னால் எடுத்துக்காட்ட முடியும். நண்பியே ஏன், இன்று நமது இனத்தின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடுகின்ற அளவுக்கு எமது பெண்கள் வலிமை பெற்றுள்ள நிலையில் இவை ஆண்களுக்குரியது இதில் நாங்கள் தலையிடக்கூடாது என ஒதுங்கிப் போகும் பெண்கள் பெண் குலத்துககே இழுக்கானவர்கள்.


நண்பியே பெண்ணியம் பற்றிப் பாரதி கூறிய ஒரு கருத்தினை உனக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். "நாணமும் அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம், ஞான நல்லறம் வீரசுதந்திரம் பேணு நற்குடிப் பெண்களின் குணங்களாகும்". எனவே, இவை பெண்களால் சாதிக்கமுடியாதவை இவை ஆண்களுக்கே உரியவை என உங்களை நீங்களே ஓரம் கட்டும் எண்ணத்தில் இருந்து உன்னைப்போன்ற பெண்கள் விடுபடவேண்டும் எனக்கூறி என் மடலை இதுவரையில் நிறைவு செய்கிறேன்.

அன்புள்ள சிநேகிதி
லெஸ்லினா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சுமுகத்தின் தேடல்

எனக்கு ஒரு ஆசை. என்னுடைய அக்காவின் பிறந்தநாளுக்கு ஒரு நல்ல பரிசு கொடுக்க வேணும். எப்படி? எதைக் கொடுப்பது. அக்கா என்னுடன் கூடப்பிறவாத ஒரு தெய்வப்பிறவி. அவளுடைய பெயர் திருமகள். என்னுடைய பெயர் பூமகள். நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் அறிந்ததே சுவையான நிகழ்ச்சி. எனக்கு அம்மா, அப்பா, உடன்பிறப்பு என்ற ஒருவருமே இல்லை. தனிப் பிறவி. என்னை வளர்க்கும் அம்மாவே எனது உலகம். அவவிடம் என்னைப்பற்றிக் கேட்பேன். அவ நிறையச் சைகைமொழியிலே செல்லுவா. எனக்கு அது முழுக்க விளங்காது. கொஞ்சந்தான் விளங்கும். அதைவிட அவவுக்குக் கண்பார்வையும் தெளிவில்லை. பிறகென்ன எல்லாம் நான்தான் செய்யவேணும். அவவை நான் அம்மா!...... என்று கூப்பிடும்போது அவவின் முகம் பூப்போலச் சிரிக்கும். அம்மாவுக்கு நீளத்தலைமயிர். தூக்கி முடிந்திருப்பாள். அது பெரிய பனங்காய் போலிருக்கும். அவவுடைய வேலை மாவிடித்து வறுத்துக்கொடுப்பது. அந்த வேலை கஷ்டமானது என்பதை நான் முதலில் எண்ணிப் பார்க்கவில்லை!



ஒரு நாள் அம்மா மாவிடித்துக் கொண்டிருந்தாள். நான் அன்று விடுமுறை என்பதால் பாடசாலைக்குப் போகவில்லை. எனவே, அம்மாவுக்கு உதவி செய்யலாமென எண்ணி உலக்கையைத் தூக்கினேன். ம.....! ம!...... எனது முழுப்பலமும் சேர்த்து முயற்சி செய்தேன். முடியவேயில்லை. அப்போது அம்மாவைப் பார்த்தேன். அவள் கைமொழி சொன்னது. "நீ வளரவேண்டும்." நான் ஒன்றும் பேசவில்லை. பக்கத்து வேப்பமரக் குற்றியில் இருந்து யோசித்துக் கொண்டிருந்தேன். பழுத்த வேப்பம்பழம் கீழே விழ அதை எடுத்து மணலை ஊதிவிட்டுக் கோதைக் கழற்றி வாயில் போட்டுச் சூப்பினேன். இனித்தது. ஆனால், கசப்பை உணருமுன் விதையைத் துப்பிவிட்டேன். மரக்கிளையில் இருந்த காகம் ஒன்று என்னை வியப்பாகத் தலையைச் சாய்த்துப் பார்த்தது. பிறகு "நீயுமா இதைச் சாப்பிடுகிறாய்!" என்பது போல என்னைப் பார்த்துக் கரைந்தது. நானும் "ஓம்" என்று சொல்லுவது போலக் கா...! கா...! என்று கத்தினேன். காகம் என்னை முறைத்துப் பார்த்துவிட்டு விர்... என்று பறந்து போய் விட்டது...

அப்போது சர்... என்ற சத்தத்தோடு ஒரு கார் வந்து நின்றது. காரிலிருந்து ஒரு அம்மா இறங்கி வந்தா. நல்ல குண்டு. குட்டியானை போல இருந்தது. சீ... சீ!.. யானை அவவைவிட மெல்லிசு..! பின்னால் ஒரு அக்கா இறங்கி வந்தாள். பாவாடை தாவணி!... கொடிபோல உடல்!.. ஐயோ! வடிவெண்டால் வடிவு. நான் எழும்பி நிண்டு அக்காவைப் பார்த்தேன்! அவள் என்னைப் பார்த்து அழகாகச் சிரித்தாள். குண்டு அம்மா, அம்மாவிடம் சைகைமொழியில் பேசிக்கொண்டிருந்தாள். இதுதான் சரியான தருணம்! நான் அக்காவுக்குக் கிட்டப்போக அவளும் முன்னே வந்து "உன்ர பேர் என்ன தங்கச்சி!" என்று கேட்டபோது நான் சொக்கிப் போனேன். கொஞ்சம் வெட்கமாயும் இருந்தது. மெல்லிய குரலில் "பூமகள்" என்றேன். அவள் துள்ளியபடி என்கையைப் பற்றி "என்ர பேர் திருமகள்" என்று சொன்னாள். நான் அவள் கைப்பிடியில் மயங்கிக்கிடந்தேன். அவள் உடம்பில் பூசியிருந்த பவுடர் மல்லிகைப் பூவைப்போல மணந்தது! குண்டு அம்மா அருகில் வர அக்கா கையை விட்டுவிட்டாள். "அம்மா!" இவளின்ர பேர் பூமகள்!... என்ர பேர் திருமகள்! என்று சொன்னாள். அந்த அம்மாவின் முகம் கறுத்துவிட்டது. "சரி... சரி... போய்க் காரிலை ஏறு!" குரலில் கண்டிப்பு இருந்தது. அக்கா, "பூமகள் போட்டு வாறன்!" என்று சொல்லிப்போட்டு ஓடிப்போய்க் காரில் ஏறினாள். குண்டு அம்மா எனக்குச் சொன்னா!... "அவளோட சரிக்குச் சரி நிண்டு கதைக்க உனக்கென்னடி தகுதி!... தாய் தேப்பன் தெரியாத கழுதை!... ஏதோ மாவிடிக்க வந்தா... சிநேகிதம் பிடிக்கவாறியோ!" அவள் படபடவெண்டு முகத்திலை அடிப்பது போலச் சொன்னாள். எனக்குக் கோபம் தலைக்கேறியது. 'உவவை இனியென்ன மரியாதையாகக் கதைக்கிறது. உவள் குண்டு, யானை, பூதம் என்று மனத்துள் திட்டினேன்...! என் அம்மாவிடம் போனேன். அம்மாவின் கையில் அந்தக் குண்டு கொடுத்த 2 ரூபா தாள்காசு கிடந்தது. அதை என்னிடம் ' தந்து தைலாப் பெட்டியுக்கை வைக்கச் சொன்னாள். நான் திருப்பிக் கொடுத்துவிட்டு "நீயே வை" என்று சொன்னேன்! அம்மா வியப்பாக என்னைப் பார்த்துவிட்டுப் போனாள். எனக்கு நெஞ்சு கனத்தது. என் பாடப்புத்தகத்தை எடுத்து "எங்கள் குடும்பம்" என்ற பாடத்தில் இருந்த படத்தைப் பார்த்தேன். அந்தக் குண்டு சொன்னது... ஏன்... எனக்கு அழுகை வந்தது.

மறுநாள் பாடசாலையில் ரீச்சர் அந்தப் பாடத்தைப் படிப்பித்தபோது, எனக்கு என் நிலைமை விளங்கியது. எல்லோரையும் அவ குடும்பப் படம் வரையச் சொன்னபோது உற்சாகமாக வரைந்தார்கள். நான் மட்டும் பேசாமல் இருந்தேன்... பாடம் முடிய மணியடித்தது. புத்தகப்பையைத் தோளில் போட்டுக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தபோது மனசு பாரமாக, நெஞ்சு அடைத்தது. வைரவர் கோயில் மண்டபப் படிக்கட்டில் பேசாமல் போயிருந்தேன். கண்ணை மூடிக்கொண்டு நான் காணாத அம்மாவையும், அப்பாவையும் கற்பனை செய்ய முயன்றேன். எனக்கு அழுகைதான் வந்தது. வைரவர் என் கவலையைத் தீர்ப்பாரா! என் மனம் நினைத்தது. "என்ன! பூமகள்!... இஞ்சை என்ன செய்யிறாய்?" குரல் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்ணைத் திறக்கத் திருமகள் அக்கா முன்னால் சிரித்துக்கொண்டிருந்தாள். அவள் வந்த கார் சற்றுத் தூரத்தில் நின்றது. அவள் என்னருகில் வந்து இருந்தாள். "பூமகள்! நேற்று அம்மா என்னட்டை வந்து உன்னோட கதைக்கக் கூடாதெண்டு சொன்னாள். நானும் உன்னைச் சந்திக்க முடியாதெண்டு நினைச்சுக் கவலைப்பட்டேன். ஆனால், கடவுள் இண்டைக்கு வழிகாட்டிப் போட்டார். கார்ச் சாரதி வீட்டைபோய்ச் சொல்லாமலிருக்க ஒரு நல்லவழி இருக்கு. அவர் களவாகச் சிகரெட் குடிக்கிறவர். அம்மாவிட்டைச் சொல்லிப் போடுவன் எண்டு வெருட்டலாம். அக்காவின் கெட்டித்தனம் எனக்கு வியப்பாக இருந்தது. பாடசாலை நாட்களில் நாங்கள் இருவரும் வைரவர் கோயில் மண்டபத்தில் பொழுதைக் கழித்தோம். புளியமரத் தடியில் எட்டாங்கோடு விளையாடினோம். நான் அக்காவுக்குக் கொக்கான் வெட்டக் கற்றுத் கொடுத்தேன். அவள் எனக்கு நாயும், புலியும் விளையாட்டுச் சொல்லித்தந்தாள். அவளுடைய கார்ச் சாரதி அந்த நேரத்தில் காரில் சாய்ந்தபடி ஆனந்தமாக சிகரெட்டை ஊதித் தள்ளுவார். அக்கா சொன்னாள். "பூமகள் அவரையும் என்னால் வெருட்ட முடியுது எண்டு நினைக்காதே! அவரையும் திருத்த முயற்சி எடுப்போம். "அவரையும் எங்கள் விளையாட்டில் இணைத்து விளையாடினோம்." அக்காவும், நானும் அவருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தோம். வீட்டிலே மேலதிக வகுப்பு என்று இருவரும் பொய் சொல்லிவிட்டு ஒரு மணி நேரத்தை மகிழ்வாகக் களித்தோம்.

ஆறு மாதம் ஓடி விட்டது. வாகனச் சாரதி இப்போது சிகரெட் குடிப்பதில்லை. 'ஈழநாடு' பத்திரிகை வாசிக்கிறார். நானும் அக்காவும் விளையாட்டை நிறுத்திவிட்டு பாடசாலைப் பாடங்களைப் படிக்கிறோம். வைரவர் மண்டபம் இப்போது படிப்பு மண்டபமாக மாறிவிட்டது. கோயிலடியில் இடம்பெயர்ந்து வந்து குடிசை கட்டி வாழும் குடும்பங்கள் சில அங்கே நிறையக் குழந்தைகள்.

அவர்கள் இப்போது எங்களிடம் படிக்க வருகிறார்கள். அக்காதான் அதிபர் நானும் வாகனச் சாரதியும் ஆசிரியர்கள். ஆடலும், பாடலும் அவர்களுக்கு அக்கா சொல்லிக் கொடுப்பாள். நேற்று அவள் பாடிய பாட்டைக் குழந்தைகள் சேர்ந்து பாடிய போது எனக்குப் புல்லரித்தது.

தெய்வம் நமக்குத் துணை பாப்பா!... ஒரு தீங்குவர மொட்டாது பாப்பா!.. அக்கா நீ தெய்வப் பிறவிதானடி! நான் எனக்குள் அடிக்கடி சொல்லிக் கொள்வேன். வீட்டில் வாய்பேசமுடியாத அம்மாவோடு உற்சாகமற்று வாழ்ந்த எனக்கு நீ உயிர் தந்தாய். பேச்சால் எல்லோரும் தொடர்பு கொள்ளும் மகிழ்வை நீ கொடுத்தாய். நேற்று நீ உன்னுடைய பிறந்தநாள் நாளை பெரியளவில் கொண்டாடப்படுவதாகச் சொன்னாய்! நான் ஏதாவது உனக்குத் தரவேண்டுமே! என் மனம் துடித்தது. வைரவர் கோயிலடியில் வேப்பமரத்திலிருந்து பழங்கள் விழுந்து கொண்டிருந்தன.

என் மூளையில் மின்னல் போல ஒரு எண்ணம்! மளமளவென்று செயற்பட்டேன். என் புத்தகப்பையிலிருந்து ஒரு கொப்பியை எடுத்தேன். சீ!... இது காணாது... சித்திரக் கொப்பி கண்ணில் பட்டது. ஒரு தாளைக் கிழித்தேன். குப்பியில் இருந்த பிசினையும் எடுத்தேன். தாளில் பூசி "திருமகளுக்குப் பூமகளின் வாழ்த்துக்கள்" என்ற பெரிய எழுத்தில் இரட்டைக்கோடு போட்டு எழுதினேன். காய்ந்த வேப்பம் விதைகள் வெள்ளை நிறம், கோது மஞ்சள்நிறம். எடுத்து எழுத்துகளுக்கு மேலே மேலே ஒட்டினேன். சில நிமிடத்துள் வேலை முடிந்துவிட்டது. அதைக் கொஞ்சம் வெயிலில் வைத்தேன். இப்ப சரி! என் கைவண்ணம் நன்றாய்த்தான் இருந்தது. கார்ச் சத்தம் கேட்டது. அக்கா வருகிறாள். அவளிடம் என் பரிசைக் கொடுக்கிறேன்... அவள் அதை வாங்கிக் கொண்டு என்னைப் பார்த்துச் சிரித்தாள். அவள் வாய் சொன்னது -

"பூமகள் இது தான் உயர்ந்த பரிசடி!" என்மனம் மகிழ்வுடன் வானத்தில் மிதக்க நான் அக்காவை வணங்கினேன். அக்கா எனக்கு வைரவர் மூலத்தானத்தைக் காட்டினாள்.

**மனோன்மணி சண்முகதாஸ்.**



# ஆள்பாதி ஆடைபாதி

மனிதர்களுக்கு உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் மகிழ்ச்சியும், மகத்துவமும் தரக் கூடியது, அவர்கள் அணியும் அழகான, தூய்மையான, எளிமையான ஆடைகளே. ஆள்பாதி, ஆடைபாதி என்று சும்மாவா சொன்னார்கள். எனவே, அணியும் ஆடைகளுக்கு நாம் முக்கியத்துவம் தர வேண்டியது அவசியமாகிறது.

முன்பின் அறிமுகமில்லாதவர்களிடம் கூட, அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகளைக் கொண்டே அவர்கள் பற்றிய அபிப்பிராயத்தை நாம் ஏற்படுத்துகிறோம். நல்ல ஆடைகளை அணிந்திருப்பவர்களைப் பார்த்தால் 'நல்லவர்கள் தப்பு தவறு செய்யமாட்டார்கள்' என்று நாம் நம்புகிறோம். அப்படி நம்பி ஏமாறுவது எமது தப்பு என்றே கூறவேண்டும்.

எது எப்படி இருப்பினும், நாளுக்கு நாள் மாறிவரும் உலகில் - நிமிடத்துக்கு நிமிடம் புதுவகையான வடிவமைப்பில் ஆடைகள் வந்தாலும், எங்களுடைய காலநிலை, கலாசாரம், ரசனை, தோற்றத்துக்கு ஏற்றபடி ஆடைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கோபப்பார்வை, முறையற்ற நடவடிக்கைகள் போன்றவற்றுடன் தரம் குறைந்த ஆடைகளும் ஒருவரைப் பற்றித் தவறாக எடைபோட வைக்கிறது என்கின்றார்கள் ஆடைவடிவமைப்பாளர்கள்.

ஆடைகளை ஒருவர் எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டுமென அவர்கள் கூறிய ஆலோசனைகள்

- ☛ உங்கள் வயதுக்கும் தோற்றத்துக்கும் பொருத்தமாக இருக்க வேண்டும்.
- ☛ உங்களுடைய அன்றாடப் பணிகளுக்கும் பொருளாதார நிலைக்கும் ஏற்றதாக இருக்கவேண்டும்.
- ☛ ஆடைகளைத் தேர்ந்தெடுத்து அணியும் போது, உங்கள் அழகை மேலும் கூட்டக்கூடியதாக இருக்கவேண்டும்.
- ☛ எந்த வகையான ஆடைகள் எமக்கு நன்றாக இருக்கிறது. எமக்கு புதுப்பொலிவு தருகிறது என்ற உணர்வே, சுயமதிப்பும் தருகின்றது. சுயமதிப்பிருந்தால், தன்னம்பிக்கையுடன் காரியங்களை ஆற்றக்கூடிய சக்தி தானாகவே வரும்.
- ☛ ஆடைகளை தேர்ந்தெடுக்கும்போது மிகச் வசதியாகவும், உங்களுடன் இருப்பவர்கள் முகம் சுழிக்காமல் இருக்கும் படியும் பார்த்துக்கொள்ளுங்கள்.

உங்கள் ஆடைகளை, உங்களைவிட மற்றவர்களே அதிகம் பார்க்கிறார்கள். எனவே மற்றவர்களின் கவனம் சிதறாத வண்ணம் அவை அமைய வேண்டும். குறிப்பாக நவநாகரிக ஆடை அணிந்து பொது இடங்களுக்குச் சென்றால், நாம் காட்சிப் பொருளாகிவிடும் வாய்ப்பு இருக்கிறது. பிறரை மகிழச் செய்வதற்குப் பதில் நெளியச் செய்வதில் என்ன இருக்கிறது. எனவே, பிறர் கண்களை உறுத்தாத விதத்தில் கண்ணியமாக உடுக்க வேண்டியது மிக அவசியம்.

- ☛ காலம், நேரம், இடம், பொருள் என்பதெல்லாம் ஆடைகளுக்கும் உண்டு. அதற்கேற்றவாறும் அவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- ☛ வேடம் போடாதீர்கள். நீங்கள் உங்களுக்குள் என்னவோ, அதையே ஆடையிலும் பிரதிபலியுங்கள். மிகவும் நேர்மையாக உங்கள் ஆடைகளே உங்களை பிரதிபலிக்கின்றன என்பதை மறக்கவேண்டாம். நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அதை உங்கள் ஆடைகளே சொல்லிவிடும். அது உங்களின் தோற்றத்தின் ஒட்டு மொத்த பிரதிபலிப்பு.
- ☛ குமார் என்றதும் நீலநிறச் சேட்டும், மாலா என்றதும் பச்சை நிறச் சேலையும் நினைவுக்கு வந்தால் எப்படி இருக்கும். எனவே... கொஞ்சநேரம் ஒதுக்குங்கள், ஆடைகளைத் தெரிவுசெய்வதற்கு.
- ☛ பொருத்தமான, அழகான, எளிமையான நேர்த்தியான ஆடைகளை அணிந்து கொண்டால், உங்களை எல்லோருக்கும் பிடிக்கும். உங்களுக்கும் எல்லோரையும் பிடிக்கும். உடைகளால் மட்டும் எமக்குப் பெருமையில்லை. ஆனால், ஏனோ இந்த உலகம் பழகிப் புரிந்து கொள்ளமுன்னர் ஆடைகளை வைத்தே ஒருவரை எடைபோடுகிறது. அவ்வாறு எடை போடுவது தவறு என்றாலும், அதன் பின்னால் இருக்கும் மனோதத்துவத்தைப் புரிந்து கொண்டு செயல்படுவது தான் விவேகம். ✪

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.கிராம அலுவலர் பிரிவுகளில் நடமாடும் செயலக சேவை

நாவாந்துறை தெற்கு, நாவாந்துறை வடக்கு, சோனகதெரு தெற்கு, சோனகதெரு வடக்கு, புதிய சோனகதெரு ஆகிய கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு, வாக்காளர் இடாப்பில் பெயர் சேர்த்தல், தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுத்தல் போன்ற சேவை களுக்கான நடமாடும் சேவையொன்று எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நாவாந்துறை சென்மேரீஸ் தேவாலய மண்டபத்தில் நடைபெறும்.

சம்பந்தப்பட்டவர்கள், தங்கள் வசமுள்ள ஆவணங்களுடன் சமூகமளித்து, இந்தச் செயன் முறையின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளதாகவும் யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில நந்தனன் தெரிவித்தார்.

## கருணாலயம் மகளிர் இல்ல கட்டட திறப்பு விழா இன்று

திருநெல்வேலி-பலாலி வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட கருணாலயம் அன்னை கிருஷ்ணபாய் மகளிர் இல்லக் கட்டடம் இன்று மாலை 5.30 மணியளவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

அரசினர் விவசாயக் கல்லூரிக்கு எதிரில் புதிதாக அமைந்துள்ள இந்தக் கட்டடம் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தஜீயினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படும்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சிவத்தொண்டர் நிலையம் செல்லத்துரை சுவாமிகள் ஆகியோர் உரை ஆற்றுவார்கள்.

இந்த மகளிர் இல்லம் ஆதரவற்ற சிறுமியருக்கு உடை, உணவு, கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்குவதோடு மாத்திரமன்றி, இந்துசமய கலாசார, பாரம்பரியங்களுக்கேற்ப, ஆன்மீக அனுஷ்டானங் களோடு, பின்னிப்பிணைந்த சீலம்மிக்க நல் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கான சகல ஊக்குவிப்புக்களையும் முன்னெடுக்கவுள்ளது.

# போக்குவரத்து திணைக்களத்துக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு எதிராக அச்சுவேலியைச் சேர்ந்த நபர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் தான் 2000ஆம் ஆண்டில் சாரதி ஆனுமதிப்பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சை, செய்முறைப்பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த போதும் தனக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை எனவும்,

இது தொடர்பாக அவர் கொழும்பிலுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்தபோதும் அந்த அனுதிப்பத்திரம் 2003ஆம் ஆண்டே அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இந்த விடயத்தில் தனக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு கூறி, இவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் மிக விரைவில் ஆரம்பமாகும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சீ)

# பள்ளிவாசல் கூரைத்தகடு வழக்கு; விபரங்களை சமர்ப்பிக்குமாறு பணிப்பு!

(மானிப்பாய்)

யாழ்.மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள முஸ்லீம் பள்ளிவாசலுக்கு வழங்கப்பட்ட 250 பைக்கற் சீமெந்து, கூரைத்தகடு விநியோகம் சம்பந்தமான வழக்கு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் இடம்பெறறது.

முன்னாள் இந்து கலாசார அமைச்சினால் இந்தப் பள்ளிவாசலுக்கு என 250 பைக்கற் சீமெந்தும், வேறு சில உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால், இந்தப் பொருட்கள் வேறு முஸ்லீம் ஆலயங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், என இந்து கலாசார அமைச்சு கூறியதாக யாழ்.மாவட்ட முஸ்லீம்கள் சம்மேளனம் என்ற அமைப்பு தெரிவித்திருந்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற வழக்கில் இதைக் கவனத்தில் எடுத்த நீதிவான், இந்து கலாசார அமைச்சின் செயலாளரின் பதிவாளருக்கு அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

இவை எந்த ஆலயங்களுக்கு என்னென்ன தேவைக்குக் கொடுக்கப்பட்டன என்ற விபரத்தை 08.09.2004 இற்கு முதல் தனக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுள்ளார்.

மேலும் ஏனைய ஆலயங்ககளைப் போல, தற்போது முஸ்லீம் ஆலயங்களுக்கும் இத்தகைய பிணக்குகள் பரவியுள்ளது தொடர்பாக நீதிவான் விசனம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- முஸ்லீம் பள்ளிவாசல் மதகுருமார் தமது கற்கை நெறிகளைப் பூரணமாகப் பூர்த்திசெய்து வழிபாட்டில் ஈடுபடுவார்களேயானால் இது போன்ற பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்றார்.

## நேர்முகப்பரீட்சை

வடக்கு - கிழக்கு துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குடிசார் துறைகளின் (கட்டட நிர்மாணம், பாலம் அமைத்தல், பெருந்தெருக்கள், நீர்ப்பாசனம்) வேலைவாய்ப்பு பெற்றுக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நாளை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

என்.சி.ரி. மாணவர்களும் அழைக்கப்படுகின்றனர். தங்கள் தகுதிச் சான்றிதழ்களுடன் நேரில் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## திருட்டு மின்சாரம் பெற்றோர் யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர்

உரும்பிராய்ப் பகுதியில் திருட்டு மின்சாரம் பெற்ற 8 பேர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி இ.த.விக்னராஜா ஒவ்வொருவரையும் தலா 5 ஆயிரம் ரூபாவைக் குற்றப்பணமாகவும், தர்மப்பணமாக 2 ஆயிரம் ரூபாவை "யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கம், யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள புற்றுநோய்த் தடுப்பு நிறுவனம், யாழ்.மாவட்ட சூழல் பாதுகாப்பு நிறுவனம்" என்பவற்றுக்குக் கொடுக்கும் படியும் உத்தரவிட்டுத் தீர்ப்பு வழங்கினார்.

யாழ்.சித்தமருத்துவத்துறைக்கு

## மானியங்கள் ஆணைக்குழுவே மாணவர்களை தெரிவு செய்யும்

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறைக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போது, இந்த முறை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாகவே தெரிவு இடம்பெறும்.

கடந்த காலங்களில் சித்த மருத்துவத் துறைக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக யாழ்.பல்கலைக்கழகத்தினாலேயே நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு வந்தன.

ஆனால், இந்த முறை ஏனைய பாடத்துறைகளுக்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக குழுவினால் வெட்டுப்புள்ளி அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதைப் போன்றே, சித்த மருத்துவத்துறைக்கும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்தார்.

இந்த முறை பல்கலைக்கழக அனுமதிக்காக, முதலாவது படிவத்தைப் பூர்த்திசெய்து அனுப்புகின்ற விஞ்ஞானத்துறை மாணவர்கள் தமது கற்கை நெறித்தெரிவின்போது சித்த மருத்துவத்துறையையும் தெரிவுசெய்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. (லெ)

## தமிழிசை விருந்து

முல்லைத்தீவு மாவட்ட நுண் கலைக் கல்லூரியின் ஒகஸ்ட் தமிழ் இசைவிருந்து நிகழ்ச்சிகள் நாளை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு புதுக்குடியிருப்பு நுண்கலைக் கலாமண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்

இதில் இசையரங்கம், சிறப்புத் தமிழ் இசை நிகழ்ச்சி என்பனவும் இடமபெறும்.

## பயிற்சிப்பட்டறை

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தில், சிறுவர் உரிமைகள் தொடர்பான ஒருநாள் பயிற்சிப்பட்டறை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முல்லைத்தீவு - மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ச.அ.ஜெரோன் தலைமையில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை பயிற்சிநெறி நடைபெற்றது.

சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை உத்தியோகத்தர் சிவபாலசுப்பிரமணியம் உரைநிகழ்த்தினார். சமூக சேவைகள் உத்தியோகத்தர் குணசிங்கம், சிவபுரம் பாடசாலை அதிபர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். இதில் சிறுவர் உரிமைகள், சிறுவர் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு தொடர்பான விடயங்கள் ஆகியன பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

— கிளிநொச்சி — அக்கராயன் —

# பண்டைக்கால குளங்களின் அணைக்கட்டுக்கள் கண்டுபிடிப்பு

கிளிநொச்சி அக்கராயன் வலது கரை, மக்களால் காட்டுப் பகுதியில் இரு பண்டைக்காலக் குளங்களின் அணைக்கட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த இருகுளங்களும் உடைப்பெடுத்துக் கைவிடப்பட்டிருந்தது. இதனை இந்தப் பகதி மக்கள் துப்புரவு செய்துவருகின்றனர்.

தொல்லியல், தொல்பொருள் தேடலின்போது, கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் குளங்களும் மீள நீர்த்தேக்கும் பொருட்டு குளங்களைக் கட்டியமைக்கும் முன்னோடியாக சிரமதானப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

இந்த சிரமதானப் பணிகள், அக்கராயன் பகுதி மக்கள் சுழற்சி முறையில் செய்து வருகின்றனர்.

இதுவரை யூனியன் குளம் கிராம முன்னேற்றச் சங்கத்தினர், வானதாரைகை விளையாட்டுக் கழகத்தினர் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஏனைய மக்களும் சுழற்சி முறையில் இந்தப் பணியை மேற்கொள்ளவுள்ளனர்.

எந்தவொரு நிறுவனத்தினதும் உதவியுமன்றி, மக்கள் தாமே இந்தப் பணியைச் செய்துவருகின்றனர்.

கிளிநொச்சிப் பிரதேச நீர்ப்பாசனப் பணிப்பாளர் நேரடியாக இந்த அணைகளைப் பார்வையிட்டதுடன், இது மீளக்கட்டப்படக்கூடியது எனவும் தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகளும் இந்தப் பணிகளைப் பார்வையிட்டனர். (த)




## நீர்த்தாங்கிகள் மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு

குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களுக்கு நீர்த்தாங்கிகள் மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, வவுனியா அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் திட்டத்துக்கென ஒரு தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பாலமோட்டை உட்பட்ட, பல இடங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.



முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் உள்ள பாலம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

படம்: திரு

## செயற்கைமுறை சினைப்படுத்தல்; விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை

பொருண்மிய மதியுரையகத்தின் கீழ் இயங்கும், காராலி செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நிலையத்தின் செயற்பாடுகள் விரிவாக்கப்படவுள்ளது.

இந்த விரிவாக்கத்துக்காக 2.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சியிலுள்ள உருத்திரபுரம், வட்டக்கச்சி, பரந்தன், பளை, முழங்காவில், ஸ்கந்தபுரம் ஆகிய பிரதேசங்களுக்கும், இதன் செயற்பாடுகள் விரிவாக்கப் படவுள்ளதாகக் காராலி செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையத்தினர் தெரிவித்தனர்.

## முல்லைத்தீவு பிரதேசத்தில் திடீர் சுகாதார பரிசோதனை

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி, பாலைநகர் பிரதேசங்களில் திடீர் சுகாதாரப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

தமிழீழ சுகாதார சேவையின் முல்லைத்தீவு மாவட்டத்தினரும், மல்லாவி பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரும் இணைந்து சுகாதாரப் பரிசோதனையை மேற்கொண்டனர்.

கடந்த 17 ஆம் திகதி ஆங்கில மருந்து விற்பனை நிலையங்கள், உணவகங்கள், நெல்குற்றும் ஆலைகள் என்பனவற்றில் இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பரிசோதனையின் போது பழுதடைந்த உணவு வகைகள், சிவப்பு எழுத்துப் பொறிக்கப்பட்ட உருழைக்கிழங்கு, பொதி செய்யப்பட்டு வரும் கழுவப்படாத சாக்குகளில் அவிக்கப்பட்ட பிட்டு, இடியப்பம் மற்றும் அந்தச் சாக்கினைப் பயன்படுத்தி வடிக்கப்பட்ட சோறு போன்ற உணவு வகைகளும் கண்டு பிடிக்கப்பட்டது.

நோய்க்காவியான நுளம்பு, இலையான் என்பனவற்றின் பெருக்கத்துக்கு இடமான முறையில் இருந்த இரண்டு உணவகங்கள், தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக தமிழீழ சுகாதார சேவையின் முல்லைமாவட்ட செயலகத்தினர் தெரிவித்தனர்.

மேலும் சுகாதாரத்தைப் பேணுவது தொடர்பான அறிவுரைகளும் சுகாதார சேவையினரால் வழங்கப்பட்டது.

## கமக்காரர் அமைப்புகளின் சங்கமம் நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்ட மாங்குளப் பிரதேச கமக்கார அமைப்புக்களின் சங்கம நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது.

மாங்குளம் மத்திய மகாவித்தியாலயத்தில் காலை 10 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வில், மாங்குளம் கமக்காரர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளும் ஆராயப்படவுள்ளது.

## கருத்தரங்கு

கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கு, வீதி ஒழுங்கு தொடர்பான கருத்தமர்வு நேற்றுமுன் தினம் மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் இராநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

தமிழீழ காவற்துறை நடுவப்பணிமனையைச்சேர்ந்த சி.மாதவன், குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் பா.இயலரசன், நடுவப் பணிமனைக் குற்றத்தடுப்புப் பிரிவு பிரதம பரிசோதகர் சி.குணரட்ணம், வீதி போக்குவரத்துப பிரவுப் பொறுப்பாளர் கி.சிவகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

இதில் வீதி ஒழுங்கு தொடர்பான விதிகள் ஊழியர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*காட்சிக்கு எழியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்*
*மீக்கூறும் மன்னன் நிலம்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## முரண்படும் சிங்களத் தலைமைகளால் சமாதானத்தை உறுதிசெய்யமுடியாது

தற்போது நிரந்தரமாகவே தேக்க நிலையொன்றை எட்டிய நிலையிலுள்ள சமாதான முயற்சிகளின் எதிர்காலம் குறித்த அனைத்து வகையிலான நம்பிக்கைகளும் அனைத்து மட்டங்களிலும் சந்தேகத்துக்கிடமான நிலையில், மீண்டும் ஒரு யுத்தம் குறித்த அச்சம் சகலர் மனதிலும் வெறுமை தோற்றுவிக்கத் தொடங்கியுள்ளது என்பது நிஜமேயாகும்.

சமாதான முன்னெடுப்புக்கு அவசியமான ஒவ்வொரு விடயமும் அரசினாலும், ஜனாதிபதியாலும், ஏனைய பெரும்பான்மையின பேரினவாத சிந்தனையாளர்களாலும உதாசீனம் செய்யப்பட்டு - புறக்கணிக்கப்படும் நிலை, அனைத்துலக அமைதி விரும்பிகளால் சுத்த கவலையுடன் உற்றுநோக்கப்பட்டு வருகின்றது.

நோர்வேயின் அனுசரணையாளர்கள் தமது விக்கிரமாதித்த முயற்சிகளில் பலன் ஏதும் கிடைக்காத நிலையில், தளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளதுடன், சினமும், வெறுப்பும் கொள்ளவும் தொடங்கயுள்ளனர் என்பதை அண்மைக்கால அவர்களின் அறிக்கை மற்றும் அறிவுறுத்தல்கள் உணர்த்தியிருக்கின்றன.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் விடயத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு உறுதியானதும், தெளிவானதுமான நிலைப்பாடும், கருத்தியல் நேர்த்தியும் வெளிப்படையாகவே இருக்கின்ற அதேசமயம் அரசு இது விடயத்தில் அரசியல் முதிர்ச்சியுடனும் தேசிய பொறுப்புணர்வுடனும் நடந்து கொள்வதாக இல்லை.

ஆட்சி மாற்றங்களுக்கேற்ப ஏற்படும் கொள்கைமாற்றங்கள், அதிமுக்கியத்துவமிக்க தேசியப் பிரச்சினைகளில்கூட ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டை ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் சேர்ந்து எடுக்கத் தடையாக இருப்பதானது, சமாதான முயற்சிகளில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் வலுவான சக்தியாக மாறியுள்ளதுடன், ஆளும் கட்சிக்குள்ளேயான உட்கட்சிக் கொள்கை முரண்பாடுகளும், அவர்களுக்குள்ளேயே அமைதி முயற்சிகள் தொடர்பான விடயங்களில் இணக்கம் காண இடையூறாக இருப்பதும், இன்றைய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூலகாரணமாகியுள்ளது.

எந்த வழிகளில் ஆராய்ந்தாலும் 'சமாதானம' என்பதை இலங்கையில் தென்பகுதித் தலைமைகள் ஒரு தேசிய அவசியம் எனக்கருதுவதை விடுத்துத் தமது அரசியல் எதிர்காலத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு ஆபத்தாக உணர்ந்துள்ளமையே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பெரும் சிக்கலான விடயமாகியுள்ளது.

சிங்கள, பௌத்த மக்களுக்கு - தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குதல் என்ற விடயத்தை - அவர்களின் நலனுக்கும் எதிர்காலத்துக்கும் அச்சுறுத்தலான விடயமாகவும், தமிழர்கள் உரிமை பெற்றவர்களாகிவிட்டால் அது சிங்கள இனத்தினதும், பௌத்த மதத்தினதும் வளர்ச்சிக்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்திவிடுமென்று அரசியல்ரீதியாக கருத்தேற்றம் செய்யப்பட்டுள்ளமையால், அவர்களும் பேரினவாதக் கோட்பாடுகளுக்கு அடிமையான நிலையில் பரந்தளவில் சுயாதீனமாக சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல் இழந்தவர்களாகி இனவாதிகளாக இயங்கி வருவதும் அடுத்த பிரச்சினையாகிவிட்டது. தேர்தல் காலங்களில் இலங்கையில் அதிக இனவாத வெறியுடன் கொள்கைப் பிரகடனம் செய்வோர் வெற்றி பெற்று ஆட்சிபீடம் ஏறுவதற்கு தென்பகுதி மக்கள் ஆதரவளிக்க இதுவே காரணமாகும்.

இந்த நிலை அரை நூற்றாண்டு வளர்ச்சியைக் கண்டுள்ள நிலையில் இப்போதைக்கு மாற்றம் காணும் ஒன்றாகத் தெரியவில்லை.

அதனை மாற்ற தென்பகுதி அரசியலின் பிரதான தலைமைகள் விரும்புவதாகவும் தெரியவில்லை.

நிலைமை இவ்வாறிருக்க, சர்வதேச சமூகம் சமாதானத்தைப் பல்வேறு வகையிலும் வலியுறுத்தி வருவதற்குச் செவிசாய்க்கும் விருப்பார்வமும் சிங்களத்தலைமைகளுக்கு ஆத்மார்த்தமாக இருக்கப்போவது கிடையாது என்பது உறுதியானதேயாகும்.

கடந்த இரண்டாண்டுக்கும் மேலான சமாதான சூழல் என்பது எதனைச் சாதித்தது என்பதற்குரிய விடையைச் சமாதான அனுசரணையாளர்கள் ஆராய்ந்தறிவது அவசியமாகும்.

இன்றைய போர் நிறுத்தத்தின் அனுகூலங்கள் அவலங்களுக்குள்ளான தமிழ் மக்களின் வாழ்வில் இயல்பு நிலையைக் கூட தோற்றுவிக்கவில்லை என்றால் - சமாதானத்தின் அர்த்தம் தான் என்ன என்ற கேள்வியும் எழவே செய்கிறது.

வெறுமனே அறிக்கைகளும், வாக்குறுதிகளும், நம்பிக்கைகளும் மட்டும் தமிழ் மக்களுக்கு இயல்பு வாழ்வை வழங்கப் போவது கிடையாது என்பதை சமாதானத்தை வலியுறுத்துவோர் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழ்மக்கள் சிங்கள அரசுகள் மீது மட்டுமல்ல சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகத்தின் மீதும் கூட நம்பிக்கையிழந்து விட்டார்கள் என்பது கசப்பான உண்மையேயாகும்.

செயலியக்கமற்ற, சந்திப்புகளும் கலந்துரையாடல்களும், கருத்துப் பகிர்வுகளும் காலத்தைப் போக்கடிக்க மட்டுமே உதவி வருவதாக தமிழ் மக்கள் எண்ணத் தொடங்கிவிட்டனர்.

இந்த நிலையில் நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இந்தியாவையும் இணைத்து அமைதி முயற்சிகளை சமாதானத்தீர்வு நோக்கி மீள ஆரம்பிக்க - சர்வதேச உயர்குழு ஒன்றை அமைக்க 'போக்ஃப் பவுண்டேசன்' என்ற அமைப்பு முயற்சியொன்றை ஆரம்பித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. எந்தக் குழு முயற்சி செய்தாலும் சமாதான முயற்சிகள் தொடர்பாக இனிச் சிங்கத் தலைமைகளிடையே, நியாயமான - நிரந்தரமான தீர்வொன்றை தமிழ் மக்களுக்கு அவர்களது அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் பேச்சுவார்த்தைகளின் போது வழங்குவதற்கு, இணக்கப்பாட்டை ஏற்படுத்தாமல், தமிழர் தரப்புடன் பேச்சுக்களை மேற்கொள்ள முனைவது அர்த்தமற்றதும், பயனற்றதுமான காலம் கடத்தும் முயற்சியாக மட்டுமே இருக்கும் என்பதை வலியுறுத்துவது அவசியமாகியுள்ளது.

இதனைச் சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்பு கவனத்தில் கொள்வது நல்லது என்பதே எமது கருத்தாகும்.

சிங்களத் தலைமைகளிடையே சமாதான முயற்சிகள் குறித்து தீர்க்கமான உடன்பாடு எட்டுவதற்கு முதலில் முயற்சி செய்யுங்கள். அது சாத்தியமான பின்னர் தமிழர் தலைமையுடன் பேசவாருங்கள்... அப்போது சமாதானம் நிரந்தரமாகும் வாய்ப்புக்கள் அதிகமாகக் கூடும்.

# நாடும் நடப்பும்




# தபால்களை தரம்பிரித்து வழங்குவதில் தாமதம்!

வவுனியாவில் தேங்கிக்கிடந்த தபால் பொதிகள் பல யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டபோதிலும், அதனை தரம்பிரித்து விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது -

கடந்த 10 மாதங்களாக யாழ்.மாவட்டத்துக்குச் சொந்தமான 2 ஆயிரத்து 500 வரையான தபால் பொதிகள் வவுனியாவில் தேங்கிக்கிடந்தன. அவை கடந்தமாதம் கப்பல் மூலம யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டு யாழ்.பிரதம தபாலகத்தில் ஒப்படைக் கப்பட்டன.

எனினும், அவை தரம்பிரித்து விநியோகிக்கும் நடவடிக்கைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாதிருப்பதாகத் தகவலறிந்த தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதுமட்டுமன்றி இந்தத் தபால் பொதிகளின் விநியோகத்தில் அவர்கள் அக்கறையுடன் செயற்படாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. யாழ்.செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவுத் திணைக்களத்திற்குத் தினமும் நூற்றுக்கணக்கானோர் அடையாள அட்டைகளைப் பெறும் நோக்கில் வந்து செல்கின்றனர்.

கடந்தவாரம் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்ட 2 ஆயிரத்து 51 தபால் பொதிகளில் அடையாள அட்டைகளும் வந்திருக்கவேண்டுமென யாழ்.செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எனினும் இதுவரை எந்தவொரு தபால் பொதியும் யாழ்.செயலகத்துக்குக் கிடைக்கவில்லை. இதுகுறித்து பொதுமக்கள் தரப்பில் பெரும் குழப்பம் நிலவுகிறது.

தமக்குரிய ஏனைய கடிதங்களையோ, பொருட்களையோ பெரிதாக எதிர்பார்க்காதபோதும், தமக்குரிய அடையாள அட்டைகளையே தாம் பெற முயற்சிப்பதாக யாழ்.செயலக ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு தனது அடையாள அட்டை வந்துள்ளதா எனப்பார்க்கவந்து 7 ஆவது தடவையும் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்ற ஒருவர் குறிப்பிட்டார்.

இது குறித்து தபாலக வட்டாரங்களுடன் தொடர்புகொண்டு கேட்டபோது தமது ஆளணிப்பற்றாக்குறையால் எதனையும் உடனடியாகச் செய்யமுடியாது எனத் தெரிவித்துள்ளனா. (ப)

# விபத்துக்களைக் கட்டுப்படுத்த வீதிகளை அகலப்படுத்த வேண்டும்

## மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வாகன அதிகரிப்பிற்கேற்ப வீதி அளவுகளும் மாற்றியமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் வீதிவிபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியுமென யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார். வீதி விபத்துக்களைத் தடுப்பது குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ்.மாவட்டத்தில் தினமும் 30 வாகனங்கள்வரை புதிதாகப் பதியப்படுகின்றன. நாட்டில் சமாதான சூழல் உருவாகிய பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாகனப் போக்குவரத்தும் அதிகரித்துள்ளது.

இவ்வாறு அதிகரித்துவரும் வாகனங்களின் தொகைக்கேற்ப வதிகளும் சரிசெய்யப்படல் வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யப்படுவதில்லை. இது வீதி விபத்துக்களுக்குக் காரணமாகி வருகின்றன.

குறிப்பாக வீதிகளின் அகலம் அதிகரிக்கப்படல் வேண்டும், வீதிகள் மேடு பள்ளங்கள் இன்றி சிறப்பாகச் செப்பனிடப்படுதல் வேண்டும். இத்தகைய பணிகள் மிகவும் பூரணமாக நிறைவு செய்யப்பட்டாலேயே அவற்றால் ஏற்படக்கூடிய வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தமுடியும்.

இதேவேளை, ஒருவழிப்பாதை நடைமுறை - வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த பெரிதும் உதவும். அந்த வகையில் பொலிஸார் இந்த ஒரு வழிப்பாதை ஒழுங்கைக் கண்காணித்து வருகின்றனர். இவை நகரப்பகுதியில் அண்மைய நாட்களாக வீதி விபத்துக்கள் இடம்பெறுவதைத் தடுத்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# மோட்டார் போக்குவரத்து திணைக்கள பணிகள் பிரதேச செயலகங்களுக்கும் விரிவு!

யாழ்.குடாநாட்டில் பெருகிவரும் மோட்டார் பாவனையாளர் களின் நன்மைகருதி மோட்டார் போக்குவரத்துத் தொடர்பான செயறபாடுகள் தற்போது பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற் கொளளப்படுவதால், பாவனையாளர்கள் தங்கள் பிரதேச செய லகத்துடன் தொடர்புகொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள லாம் என யாழ்.செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித் தார்.

உடமை மாற்றம், பதிவுச்சான்றிதழ் பெறல், சாரதி அனுமதியட்டை நகல்பெறல், சாரதி அனுமதிப்பத்திரங்களை சாரதி அட்டையாக மாற்றுதல், சாரதி அனுமதிப்பத்திரங்களைப் புதுபித்தல், பதிவுச் சான்றிதழ்களில் திருத்தம் செய்தல் போன்ற செயற்பாடுகளை அந்தந்தப் பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (கு)

# தொழில் முயற்சியாளர்களுக்கு கடனுதவி

(திருகோணமலை)

ஜப்பானிய ஜெசிக்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் திருகோணமலை மாவட்ட மக்களுக்கு தொழில் முயற்சிகளுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த உதவித் திட்டங்களை வழங்குவது குறித்து ஜெசிக்கா நிறுவனத்தின் பிரதிநிதியான ஜக்காவா றொக்காவா நேற்று முன்தினம் பிற்பகல் திருகோணமலைக்கு விஜயம் செய்து அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சாதாரண மக்க [illegible] மேற் [illegible] கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான பணிகள் அடுத்த மாதம்முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# யுனிசெவ் நிகழ்ச்சித்திட்ட கூட்டம் நேற்று நடைபெற்றது

யுனிசெவ் நிறுவனத்தின் கடந்தகால நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் ஒன்று நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்றுள்ளது. யாழ்.மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களாக யுனிசெவ் நிறுவனத்தால் பல மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் மற்றும் பொதுமக்கள், மாணவர்கள் அதனால் அடைந்துள்ள நன்மைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுற்பகல் ஆய்வுக் கூட்டமாக இது நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் யாழ்.செயலக அதிகாரிகள் யாழ். மாநகரசபை, யாழ்.மாவட்ட சுகாதாரப் பணிமனை, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உள்ளூராட்சி சபை போன்றவற்றின் அதிகாரிகளும் பங்குபற்றினர்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் தொடர்பாகவும், இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் இதில் கலந்தாலோசிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திக் கட்டுரை அறிதிரு

# புனரமைப்புக்காக காத்திருக்கும் இரணைமடு நீர்த்தேக்கம்......!

**இடதுகரை, வலதுகரை என இரு வாய்க் கால் களைக் கொண்ட இரணைமடுவின் இடது கரையில் ஊட்டக்குளமான கிளிநொச்சிக்குளம் அல்லது றை ஆறு குளம் உள்ளது. இதலிருந்துதான் கிளிநொச்சி நகருக்கான குடிநீர் வழங்கல் முன்னர் நடந்தது. இப் பொழுது மீளவும் குடிநீர் வழங்கலுக்கான ஏற்பாடு நடக்கின்றது.**

27 ஆண்டுகள் கடந்த நிலையில் வடக்கின் மிகப்பெரிய நீர்த்தேக்கமான இரணைமடு புனரமைப்புக்காக எதிர்பார்த்து நிற்கின்றது.

1977இல் கடைசியில் புனரமைப்பின் பிறகு இரணைமடு புனரமைப்பு நடைபெறவேயில்லை. 1981ல் நீர்ப்பாசனத்திட்டங்களில் புனரமைப்பிற்கு அரசு நிதி ஒதுக்கீடுகளைச் செய்தபோதும் அரசியல் காரணங்களுக்காக இரணைமடு புறக்கணிக்கப்பட்டது. இதனுடன் தமிழர் தாயகக்குளங்களும் புறக்கணிக்கப்பட்டன.

சிங்களக் குடியேற்றங்களுக்காக திருக்கோணமலையில் கந்தளாய், அம்பாறையில் சேனனாயக்க சமுத்திரம் என்பன சிறப்பாக பராமரிக்கப்படுகின்றன.

1977இன் பின் தமிழர் தாயகக் குளங்கள் புறக்கணிக்கப்பட்டன. இப்பொழுது நியாப் மூலம் உலக வங்கி தமிழர் தாயக குளங்களின் புனரமைப்புக்கு உதவுகின்றபோதலும் அது சிறிய குளங்களை மட்டுமே புனரமைக்கின்றது.

பாரியகுளங்கள் புனரமைப்புக்காக காத்துநிற்கின்றன. இந்தநிலையில் நியாப் கட்டம்2 இரணைமடு புனரமைப்புக்கு நிதி ஒதுக்கியுள்ளது. நியாப்2 இரணைமடு புனரமைப்புக்கு 100 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இரணைமடுவின் முழுமையான புனரமைப்புக்கு 4500 மில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழர் தயாகத்தின் மிகப்பெரிய கொடை இரணைமடு நீர்த்தேக்கம். வன்னியில் இரணைமடு, மன்னாரில் கட்டுக்கரை, திருக்கோணமலையில் கந்தளாய், மட்டக்களப்பில் உன்னிச்சை அம்பாறையில் சேனனாயக்க சமுத்திரம் என்பன தமிழர் தாயகத்தில் பெரும் நீர்க்கொடைகள்.

வடக்கில் மிகப்பெரிய நீர்த்தேக்கமாக இரணைமடு உள்ளது. இலங்கைத்தீவில் 7வது பெரிய நீர்த்தேக்கமாக இரணைமடு உள்ளது.



இரணைமடு என்ற பெயர். அது இயற்கையாக கனகராயன் ஆறு பண்டைக்காலத்தில் இரு குளங்களாக இருந்ததன் அடிப்படையில் வந்தது. மடு என்பது நீர்த்தேக்கம். சிறந்த ஒரு வண்டல் வெளியான இரணைமடு படுகை தொல்லியல் மையமாகவும் உள்ளது. 125000 ஆண்டுகளின் முன்னரான மனித மூதாதைகள் இரணைமடு படுகையில் வாழ்ந்ததற்கு ஆதாரமாக இலங்கையின் முன்னாள் தொல்லியல் ஆணையாளர் சிரான் தெரனியகல கல்லாயுதங்களை எடுத்தார். அதைவிட 3000 ஆண்டுகள் தொன்மையான தொல்பொருட்களும் இரணைமடு படுகையில் உள்ளன.

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் சிறிய நீர்த்தேக்கத்தை இரணைமடு படுகையில் கண்ட பிரிட்டிஸ் அதிகாரியான சேர்ஹென்றிவாட் 1856ல் அப்போதைய பிரிட்டிஸ் யாழ்ப்பாண அரச அதிபர் டேக்கிற்கு இரணைமடு நீர்த்தேக்கத்தை அமைக்கும் ஆலோசனையை முன்வைத்தார்.

1866ல் பிரிட்டிஸ் நீர்ப்பாசன பொறியிலாளரும் தொல்பொருள் தேடலாளருமான ஹென்றி பாக்கர் இரணைமடு நீர்த்தேக்கத்துக்கான திட்டத்தை வரைந்தார்.

அவரின் திட்டத்தில் இரணைமடுவின்கீழ் 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டிருந்தது. 1900ல் நீர்ப்பாசன பிரிட்டிஸ் பொறியிலாளர் று.பிரெளன் வரும்வரை இரணைமடு கட்டுமானம் வரைவு மட்டத்திலேயே இருந்தது. பொறியிலாளர் பிரெளன் அப்போதிருந்த கரைச்சிப் பகுதியில் வாழ்ந்த வெற்றிவேலு என்பவரைச் சந்தித்து இரணைமடு படுகைக் காட்டுப்பகுதியை முழுமையாக ஆராய்ந்தார். இரணைமடு கட்டுமானத்தை மேற்கொள்ள பெரும் மனிதவலு வேண்டும் என்பதற்காக ஒரு குடியிருப்பை நிறுவும் முயற்சியில் முதலில் பிரெளன் ஈடுபட்டார். இவர் தற்போது கிளிநொச்சி நகரிலுள்ள றை (DRI) ஆறுகுளம் என்ற தேக்கத்தை உருவாக்கி அதன் கீழ் மக்கள் குடியிருப்பை உருவாக்கினார். இந்த றை ஆறு குடியிருப்பு, குஞ்சுப்பரந்தன் மக்களைக் கொண்டே இரணைமடு கட்டுமானம் மக்களின் முழுமையான வியர்வையால் கட்டப்படத் தொடங்கியது 1902ல் ஆகும். 1920 ல் 19 லட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவில் இரணைமடு முதல் கட்டமாக முழுமையாக்கப்பட்டது. அப்போது இரணைமடுவின் கொள்ளளவு 44 ஆயிரம் ஏக்கர் அடி. ஆழம் 22 அடி. 1954ல் இரண்டாகம் கட்ட கொள்ளளவு அதிகரிப்பு நடைபெற்றது. அப்போது கொள்ளளவு 82 ஆயிரம் ஏக்கர் அடியாகும். இதன் மூலம் குளத்தின் நீர்மட்ட ஆழம் 30 அடியாக உயர்த்தப்பட்டது.

3ஆம் கட்டமாக கொள்ளளவு அதிகரிப்பு 1975ல் நடைபெற்றது.

1977ல் முழுமையடைந்த அக்கொள்ளளவு அதிகரிப்பின்போது இரணைமடுவின் கொள்ளளவு 1 லட்சத்து 6500 ஏக்கர் அடியாக அதிகமானது. ஆழம் 34 அடியாகும். 1977ல் முடிவடைந்த இந்தப்பணிக்குப்பின் இரணைமடு முழுப் புனரமைப்புக்கு இதுவரை உட்படுத்தப்படவில்லை. 1977ல் தான் இப்போதுள்ள வான் கதவுகள் கொண்ட தோற்றத்தை இரணைமடு பெற்றது. 227 சதுர மைல்கள் நீரேந்து பரப்புக்கொண்ட இரணைமடு கனகராயன் ஆறு, கரமாரி ஆறு என இரு ஆறுகளின் மூலம் நீரைப் பெறுகின்றது. இந்தக்குளம் 9 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. இதன் அணை 2 கிலோ மீற்றர் நீளமுடையது. இதன்மூலம் 20 882 ஏக்கர் நிலப்பரப்பு பயன்பெற்றுள்ளது.

இடதுகரை, வலதுகரை என இரு வாய்க்கால்களைக் கொண்ட இரணைமடுவின் இடதுகரையில் ஊட்டக்குளமான கிளிநொச்சிக்குளம் அல்லது றை ஆறு குளம் உள்ளது. இதலிருந்துதான் கிளிநொச்சி நகருக்கான குடிநீர் வழங்கல் முன்னர் நடந்தது. இப்பொழுது மீளவும் குடிநீர் வழங்கலுக்கான ஏற்பாடு நடக்கின்றது.

இதைவிட திருவையாறு என்ற மேட்டுநீர் பாசன குடியிருப்பு பயிர்செய் நிலங்களுக்கான ஏற்றுப்பாசன பம்பி இடது கரையில் இருக்கின்றது. 1990 உடன் இது செயலிழந்தது. மீளவும் அது இயங்கவில்லை. இதனால் திருவையாறு இன்றும் வரண்டு கிடக்கின்றது. வலதுகரையில் ஊரியான்குளம் அதன் ஊட்டக்குளமாக உள்ளது. மொத்தம் 32.5 மைல்கள் நீள வாய்க்கால்கள் மூலம் இரணைமடு கிளிநொச்சியை வளப்படுத்துகின்றது. இரணைமடு மூலமே கிளிநொச்சியில் பெருமளவில் குடியேற்றங்கள் நடந்தன. திருவையாறு ஏற்றுப்பாசனத்தை நம்பிய 1004 ஏக்கர் நிலங்கள வரண்டு வாடுகின்றன. அது இரணைமடு நீருக்காக காத்திருக்கின்து. இந்த ஏற்றுப்பாசனம் நிகழுமாயின் திருவையாறு பெரும் விளைச்சல்மிகு நிலமாக மாறும்.

சிங்கள இனவாத அரசியலால் புறக்கணிப்பட்டு புனரமைப்புக்காக காத்திருக்கும் இரணைமடுவின் நீரை குடிநீராகப் பெற யாழ்ப்பாணமும் காத்திருக்கிறது. ஈழத்தமிழரின் மூதாதைகளிலிருந்து இன்றுள்ள தலைமுறை வரையானோரை வாழவைத்துக்கொண்டிருக்கும் இரணைமடு புனரமைப்புக்காக காத்திருக்கிறது. இதன் மூலம் பல நிலங்கள் முழுமையான பயிர்ச்செய்கைக்குட்பட்டு தாயக மக்களை வாழவைக்கும்.

# இவ்வார பலன்கள்
# 20-08-2004 26-08-2004

| | ராகு | | சுக் சனி |
|---|---|---|---|
| யுரே | 20 இ.11.43 துலா, சந். 22 பி.இ. 4.39 விரு. சந் | | சூ |
| நெப் | 25 கா. 7.39 தனு. சந் | | செவ்,புத குரு |
| | | கேது | சந் |

## மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சிறு சிறு தகராறுகள் ஏற்பட்டு மறையும், பிரயாணங்களின் போது வீண் அலைச்சலும், விரயங்கள் ஏற்படும். பணவரவு ஓரளவு திருப்தியளிக்கும். தேககசுகம் பேணுதல் நன்று. தொடங்கும் கருமங்கள் சற்றுத் தாமதமடையும். திருமணப் பேச்சுக்கள் தாமதத் தின் மேல்நிறைவேறும். வர்த்தகர்களுக்கு வியா பாரத்தில் கணிசமான லாபம் கிடைக்கும். ஆடம் பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய இலாபம் பெறுவர். உத்தியோகத்தர்கள் பணியாற்று வதில் நேர்மை, நிதானம் அவசியம். வேலைப் பளு கூடுதலாக இருக்கும். மாணவர்கள் பாட த்தில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

## இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம்பாதங்கள்)*



இடமராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் தேவையற்ற வாக்கு வாதங்கள் ஏற்படலாம். இனபந்துக்களுடன் வீண் சச்சரவுகள் தோன்றும். எதிர்பாராத செலவுகள் ஏற்படுவதால் பொருளாதார நிலையில் சிக்கல்கள் ஏற்படும். தேகநிலை இடையிடையே பாதிக்கப்படலாம். மருத்துவச் செலவும் தவிர்க்க முடியாமல் இருக்கும். திருமணப் பேச்சுக்கள் தாமதமடையும். உத்தியோகத்தர்களுக்கு நினைத்தபடி கருமங்கள் நடக்காது. ஒத்துழைப்புகளும் குறையும். வியாபாரத்தில் நட்டம் ஏற்படலாம். எதிலும் எச்சரிக்கையாக இருத் தல் வேண்டும். மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை காட்டும். உற்சாகம் தேவை.

## மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திரு வாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம்பாதங்கள்)*



மிதுனராசியினருக்கு குடும்ப நிலை நன்றாக இருக்கும். இனபந்துக்களிடையே ஒற்றுமை வலுக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி ஏற்படும். தேகாரோக்கியம் நன்றாக இரு க்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் தாமதத்தின் மேல் நிறைவடையும். உத்தியோ கத்தர்களுக்கு தங்கள் கடமைகள் சீராக அமையும். அதிகாரிகளின் ஆதரவு கிடைக் கும். வர்த்தர்களுக்கு வியாபார நடவடிக்கை கள் சிறப்பாக இயங்கும் வேலையாட்களின் ஒத்துழைப்பு உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் கரிசனை கூடுதலாக இருக்கும். ஆசிரியர் மாணவர் ஒற்றுமை வலுக்கும்.

## கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசிக்கார குடும்பத்தினர்களுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சி ததும்பும். கணவன் மனைவியிடையே அந்நியோன்யம் வலுக்கும். தேகாரோக்கியம் திருப்தியாக இருக்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏற்படலாம். இன பந்துக்களின் உறவு மேலும் சிறப்படையும். திருமணங்கள் மனம் விரும்பியவாறு கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு விரும்பியவாறு தொழில் அமையும். சிலருக்கு உயர்ச்சி ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப் பாக நடக்கும். பணம் சேரும். மாணவர்கள் சிறப்பாக முன்னேற்றமடைவர். உயர்கல்வி கற்கும் வாய்ப்புக்கள் உண்டு.

## சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியினருக்கு குடும்ப உறவுகளில் மனக் கசப்பு ஏற்படும். அங்கத்தவர்களுக்குள் வாக்கு வாதங்கள் தோன்றும். ஏதிர்பாராத செலவுகள் தவிர்க்க முடியாமலிருக்கும். தேக நலத்தில் சிறு கோளாறுகள் ஏற்படலாம். விவாகப்பேச்சுக்கள் இழுபாட்டைக் காட்டும். தொடங்கிய கருமங்கள் நிறை வேறுவதில் தடை தாமதம் காட்டும். உத்தி யோகத்தர்கள் தமது பணிகளைச் செவ்வனே செய்வதில் இடையூறுகள் ஏற்படும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் குறைந்த பட்சலாபமே கிட்டும் புதிய முதலீடுகளைத் தவீர்க்கவும். மாணவர்கள் கல்வியில் அக்கறை குறைந்து காணப்படுவர். பரீட்சை முடிவுகள் திருப்தி தராது.

## கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் ஜெனன [illegible] அவ்வப்போது சிறு சச்சரவுகள் ஏற்படலாம். அயலவர்கள் உறவினர்களால் தொல்லைகள் தோன்றும். பணவரவு ஓரளவு நன்றாக இருக்கும். வீண் செலவுகளைத் தவிர்த்தல் நன்று. தேகா ரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். திருமணப் பேச்சுக்கள் திருப்தி தராது வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையிலிருக்கும். வங்கி உதவிகளும் தேவைக்கு வராது. உத்தியோகத்தர்களுக்கு பதவிப் பொறுப்புகள் அதிகரிக்கும். சகஉதவிகள் குறையும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் தேவை. சுயமுயற்சி பயனளிக்கும்.

## துலாம்

*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள் சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



துலாராசியினருக்கு குடும்பத்தில் நல்லிணக்கம் வளர்ச்சியடையும். விருந்தினர்களின் வருகை அதிகரிக்கும். நண்பர்களாலும், உறவினர்களாலும் உதவி கிடைக்கும். பொருளாதாரம் வளர்ச்சியடையும். தெய்வீகப் பயணங்கள் ஏற்பட இடமுண்டு. தேகாரோக்கியம் அவதானமாகப் பேணுதல் வேண்டும். உத்தியோகத்தர்களுக்கு பணியாட்கள் ஒத்துழைப்பு வழங்குவர். அதிகாரிகள் பாராட்டுதல்கள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வர்த்தக நடவடிக்கை சிறப்பாக அமையும். கூடுதல் லாபம் கிட்டும் மாணவர்களுக்கு முன்னேற்ற முண்டு. சிலருக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கலாம்.

## விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியினருக்கு குடும்பத்தில் அமைதி குன்றும். அங்கத்தவர்களுக்குள் கருத்து வேற்றுமை தோன்றும். சண்டைகளும் வரலாம். அயலவர்களால் உதவி கிட்டாது. வரவுக்கு மிஞ்சிய செல வுகள் ஏற்படும் தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படும் குடும்பப்பெண்கள் அமைதி பேண வேண்டியது அவசியம். திருமணப் பேச்சுக்கள் காலவரையறையின்றித் தள்ளிப்போகும். உத்தியோகத்தர்களுக்கு திட்டமிட்ட கருமங்கள் நிறைவேறாது. வேலைப்பளு அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஸ்தம்பிதமடையும். முன்னேற்றம் கிடையாது. மாணவர்கள் விளையாட்டுத் துறையில் அதிக கவனம் செலுத்துவர்.

## தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசுராசியினருக்கு இல்லறம் நல்லறமாக விளங்கும். குடும்ப நிலை உயர்ச்சி காணும். இன பந்துக்களாலும், புத்திரர்களாலும் உதவி கிட்டும். வீட்டில் நற்காரியங்கள் நடைபெறலாம். தேகாரோக்கியம் பாதிப்பில்லாமல் இருக்கும். பண வருவாய் திருப்தியளிக்கும். திருமணப் பேச்சுக்கள் திருப்தியான பலனைத் தரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். பவுண் வியாபாரிகள் கூடிய லாபத்தைப் பெறுவர். வங்கி உதவிகளும் உண்டு, உத்தியோகத்தர்களுக்கு தமது பணிகளைத் திருப்தியுடன் ஆற்றக் கூடிய தாக இருக்கும். அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் அபார முன்னேற்றமடைவர். பாராட்டுக்களையும் பெறுவர்.

## மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசிக்காரருக்கு இல்லற வாழ்க்கையில் சிறு சச்சரவுகள் வாக்குவாதங்கள் ஏற்படலாம். உறவினர் வழியிலும் மனக்கசப்புகள் காட்டும். புத்திரர் வழியில் செலவு அதிகமாகும். பணவருவாய் ஓரளவு நன்றாகவே இருக்கும். தேகசுகத்தைப் பேணிக் கொள்வது நன்று. திருமணப் பேச்சுக்கள் நிறைவேறக் கூடிய தன்மை இருந்தாலும், இறுதியில் சறுக்கல் காணும். வியாபாரம் நன்றாக நடந்தாலும் பெரிய லாபம் கிடையாது. புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் இருக்கும். ஒத்தாசை கிடையாது. பணிகளில் அவதானம் தேவை. மாணவர்கள் கல்வியில் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும். பரீட்சையில் சித்தி உண்டு.

## கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியினருக்கு இல்லற வாழ்வில் இனிமையான சந்தர்ப்பங்கள் ஏற்படும். புத்தரர்களால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் உதவுவார்கள். பொருள் வருவாய் திருப்தியாக அமையும். தேகநிலை பாதிப்படையாது. பலர் இல்லம் தேடி வருவார்கள். திருமணப்பேச்சு நற்பலனைத் தரும். வியாபார முதலீடுகளில் போதிய வருமானம் கிடைக்கும். தேங்கியிருந்த முதலீடுகள் விற்பனையாகும். உத்தியோகத்தர்கள் சிறப்பாகப் பணியாற்றி நற்பெயர் வாங்குவர். அதிகாரிகளும் பாராட்டுவர். மாணவர்கள் முன்னேற்றம் காணபர். உயர் கல்வியும் அனுகூலமாகும்.

## மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



இவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புத்திரர்களால் நற்பெயர் கிட் டும். சகோதர வழியில் உதவி உண்டு. திடீர் பணவரவு ஏற்படலாம். பெண்கள் மதிப்பு, மரியாதையுடன் காணப்படுவர். தனித்தொழில் புரிவோர் நன்மை அடைவர். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வாடிக்கையாளர் திருப்தியடைவர். கடன் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகள், பாராட்டுக்கள் கிடைக்க இடமுண்டு. நினைத்தவாறு மாற்றம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் கூடிய நாட்டம் இருக்கும். பரீட்சையில் சித்தியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்சல்வடோர் சிறையில் கலகம்

# 31 சிறைக் கைதிகள் உயிரிழப்பு!



(எல்சல்வடோர்)

எல்சல்வடோரிலுள்ள சிறையொன்றில் ஏற்பட்ட கலகத்தில் 31 சிறைக் கைதிகள் கொல்லப்பட்டதுடன், இரண்டு டசினுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தக் கலகம் எல்சல்வடோரிலுள்ள எஸ் பெரன்ஸா சிறையில் இடம்பெற்றது. சிறையிலுள்ள மாறா குழுவின் 18 அங்கத்தவர்கள், மற்றைய சிறைக்கைதிகள் மீது கைக்குண்டுகள் மற்றும் துப்பாக்கிகள் மூலம் தாக்குதலை நடத்தியதாகப் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது சிறைச்சாலையின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக எல்சல்வடோரின் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார்.

இந்தச் சிறை 800 பேரை மட்டும் வைத்



திருக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டதாகவும், ஆனால், இதற்குள் மூவாயிரம் கைதிகள் சிறை வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறைக் கைதிகளின் தாக்குதலால் சிறையில் தீ பரவியதாகவும், இது மின் ஒழுக்கு காரணமாகவே ஏற்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், இது திட்டமிட்டே நடத்தப்பட்டதாகச் சிறைச்சாலையில் உயிர் தப்பிய கைதிகள் தெரிவித்தனர்.

சம்பவம் நடைபெற்ற சிறைச்சாலைக்கு மேலதிக படையினர் அனுப்பப்பட்டதுடன் காயமடைந்த கைதிகளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல அம்புலன்ஸ் வண்டிகளும் அனுப்பப்பட்டன.

காயமடைந்த கைதிகளைக் கொண்டு சென்ற வீதி பொதுமக்கள் பாவனைக்கு மூடப்பட்டதுடன், இந்தப் பகுதியில் ஹெலிகொப்டர்கள் கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் செய்திகள் தெரிவித்தன.

சிறையில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்துவதற்கு - தீயணைப்புப் படையினருக்குப் பொலிஸார் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

கைதிகளுடன் ஒரே இடத்தில் வைக்கப்பட்டுள்ள மாறா 18 குழுவினரையும் வேறொரு இடத்திற்கு மாற்றுவதாக அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

### இத்தாலிய பிரதமரின்

## விடுமுறைகால தங்குமிடமருகே குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன



(ரோம்)

இத்தாலிய பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனியோ விடுமுறைக் காலத்தில் தங்குமிடத்திற்கருகில் குண்டு ஒன்றைக் கண்டெடுத்த இத்தாலியப் பொலிஸார் அதனைச் செயலிழக்கச் செய்தனர்.

இந்தச்சம்பவம் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயரும், அவரது மனைவி செரியும் இந்த தங்குமிடத்தில் தங்கியிருந்த ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் இடம்பெற்றது.

இரண்டாவது குண்டு, சாடினியன் கடற்கரைப் பிரதேசத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் குண்டு தொடர்பான விபரத்தை - உள்ளூர் பத்திரிகை தொலைபேசி வாயிலாகப் பெற்றுக்கொண்ட பின்னரே இது கண்டுபிடிக்கப்பட்டது.

இடதுசாரிக் குழுவினர் எனத்தெரிவித்த ஒருவர் குண்டு வைக்கப்பட்ட விபரத்தை தொலைபேசி வாயிலாகத் தெரிவித்ததாக இத்தாலியின் செய்தி நிறுவனமான அன்சா தெரிவித்தது.

ஈராக்கிலிருந்து இத்தாலியப் படைகள் விலக்கப்படாவிட்டால், இத்தாலி மீது தாக்குதல் நடத்தப்படுமென அல்கொய்டா தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்தபின்னர் இத்தாலியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




### ஈராக்கின் பாக்தாத் நகரிலுள்ள

## சதார் ஆதரவுப் படைகளின் பிரதேசத்தை அமெரிக்கப் படையினர் கைப்பற்றினர்!

ஈராக்கின் பாக்தாத் நகரத்திலுள்ள ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற சதார் ஆதரவுப்படைகள் நிலைகொண்டுள்ள பிரதேசத்தைத் தாம் கைப்பற்றியுள்ளதாக அமெரிக்கப் படையினர் அறிவித்துள்ளனர்.

சதார் ஆதரவுப்படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசம் ஒன்றின் மையப் பகுதிக்குள் - அமெரிக்கப்படையினர் நுழைந்



துள்ளதை உறுதிசெய்த பாக்தாத் நகரத்தில் உள்ள பி.பி.ஸி செய்தியாளர், இந்தப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான முழுமையான விபரங்களைப் பெறமுடியாது உள்ளதாகவும் தெரிவித்தார்.

அமெரிக்கத் துருப்பினர் டாங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும். இந்தத் தாக்குதலின் போது 50 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் போது ஒரு அமெரிக்க வீரர் உயிரிழந்துள்ளதாகவும், மற்றுமொரு அமெரிக்கப் படையினர் காயமடைந்துள்ள அதேசமயம், அமெரிக்கப் படையினருக்குச் சொந்தமான டாங்கி ஒன்று சதார் ஆதரவுப் படைகளால் அழிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றோர் செய்தி தெரிவிததது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க இராணுவம் சதார் ஆதரவுப் படைகளின் இதயப் பகுதிக்குள் தாம் நுழைந்துள்ளதாகவும், அங்குள்ள கிளர்ச்சியாளர்களை ஆயுதங்களைக் கைவிட்டுச் சரணடையும்படி ஒலிபெருக்கிகள் மூலம் அறிவிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

ஆனால் இந்தத் தகவல்களை உறுதிப்படுத்த முடியாதுள்ளதாக சில செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன. இதே சமயம் நஜாவ் நகரத்தில் உள்ள சதாரையும் அவரது படையினரையும் - ஈராக்கிய துருப்பினரும் அமெரிக்கத் துருப்பினரும் சுற்றி வளைத்துள்ளதாக அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர்.

ஈராக்கிய இடைக்கால அரசு, தன்னுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டால், தான் நஜாவ் நகரத்தை விட்டு



வெளியேறுவதாக சதார் தெரிவித்துள்ளார்.

ஆனால் சதார் நிலை கொண்டுள்ள இமாம் அலி ஷெரின் பள்ளிவாசலை விட்டு ஒரு சில மணித்தியாலங்களில் விலகிச் செல்லவேண்டும் என ஈராக்கிய இடைக்கால அரசு தெரிவித்தது.

### காஸா பகுதியில் அமைந்துள்ள

## இரண்டு தொழிற்சாலைகள் மீது இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல்!

காஸாப் பகுதியில் அமைந்துள்ள இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளின் இரண்டு ஆயுதத் தொழிற்சாலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக, இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு நடந்த இந்தத் தாக்குதல் தொடர்பாக அந்தப் பகுதியில் வாழும் பலஸ்தீன பொதுமக்கள் தெரிவித்ததாவது -

இஸ்ரேல் இராணுவத்தால் நடத்தப்பட்ட முதலாவது ஏவுகணைத் தாக்குதல் - கார்களுக்கான பற்றறிகள் செய்யும் தொழிலகத்தின் இரண்டு வெறுமையான கட்டடங்கள் மீது விழுந்து வெடித்ததாகத் தெரிவித்தனர்.

இரண்டாவது தாக்குதல் காஸாப்பகுதியிலமைந்துள்ள உலோகத் தொழிற்சாலை மீது நடத்தப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

ஆனால், இந்தத் தொழிற்சாலையில் வைத்தே இஸ்லாமிய ஆயுதக் குழுவினர் 'கசாம்' என்ற றொக்கட்டைத் தயாரித்து, காஸாப் பகுதியிலுள்ள அனைத்து ஆயுதக் குழுவினருக்கும் வழங்குவதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தொடர்பாக எவ்விதத் தகவலும் தெரியவரவில்லையென செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை, இஸ்ரேலின் நேவ் டெக்கலிம் குடியிருப்புப் பகுதிமீது ஹமாஸ் போரா



ளிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில், இரு இஸ்ரேலியர்கள் காயமடைந்துள்ளனர். இவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் ஹமாஸ் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினரான அகமட் அல் - ஜபாரி தங்கியிருந்த வீட்டின்மீது இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில், ஜபாரியின் மகனும் மற்றும் மூன்று ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர்களும் கொல்லப்பட்டதாக றொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

அத்துடன் இந்தத் தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளதாகவும், இதில் அல் - ஜபாரியும் ஒருவரென அந்தச் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்தது.

யாழ். வணிகர் கழகம் நடாத்தும்

யாழ். வர்த்தகக் கண்காட்சி 2004

ஆகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை
யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இந்தக் கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள், கல்வி அறிவியல் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வம் உள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றி பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/2937) யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மாற்றுத் தீர்வுத் திட்டம் குறித்து அரசாங்கத்துக்குள் குழப்பமேன்?

## கேள்வி எழுப்புகிறார் ரவூப் ஹக்கீம்

விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பிப்பதற்காக அரசாங்கம் இடைக்கால நிர்வாக மாற்று யோசனைகளை தயாரித்து வருகின்றதா, இல்லையா என்பதை தெளிவுபடுத்த வேண்டுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரை நிகழ்த்திய அவர் -

சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபாலவின் கருத்தும், மக்கள் விடுதலை முன்னணியின் கருத்தும் தெளிவற்ற தன்மையாக இருக்கிறது. சமாதான செயலகத்தின் பணிப்பாளர் - அரசாங்கம் மாற்று இடைக்கால நிர்வாக யோசனை ஒன்றைத் தயாரித்து வருவதாகக் கூறியுள்ளார்.

எனினும், ஜே.வி.பியோ அவ்வாறான யோசனைகள் எதுவும் தயாரிக்கப்படவில்லையென்று கூறுகின்றது. இதில் எது உண்மை என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும் என அவர் வாய்மூலம் கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே - ஐக்கிய தேசியக் கட்சி உட்பட சில கட்சிகள் அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளை குழப்பி வருகின்றன. நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது எனத் தெரிவித்தார்.

கட்சிகளிடையே மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் இந்தக் கருத்தானது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் ஆட்சியைக் குழப்புவதற்கான காரணியாக அமையாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# கிழக்கில் விடுதலைப் புலிகள் தாக்குதலுக்கு தயாராகின்றனர்!

## இராணுவப் புலனாய்வுத்துறை கூறுகிறது

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் பாரிய தாக்குதலொன்றுக்கான தயார்ப்படுத்தல் நடவடிக்கைகள் இடம்பெறுவதாக இராணுவப் புலனாய்வுத்துறையினர் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையான தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளதை அடுத்தே இந்தத் தகவலை இராணுவப் புலனாய்வுத்துறை வெளியிட்டுள்ளது.

அங்கு போராளிகளால் அதிகளவான பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள தொப்பிகல காட்டுப்பகுதியில் தொடர்ந்தும் செயற்படுவதாகக் கூறப்படும் கருணா குழுவினருக்கு எதிரான நடவடிக்கைக்காகவே இவ்வாறான தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இராணுவப் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது. (01)

### மூதூரில் கிரனேட்...

இந்தக் கைக்குண்டுத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் மூதூர் நகரப் பகுதியில் உள்ள முஸ்லிம் கடைகள் யாவும் நேற்றுப் பூட்டப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து மூதூர் நகரப்பகுதியில் சிறிது பதட்டநிலை காணப்பட்டதால் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (4,10)

### உருக்குலைந்த...

வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி 'நமது ஈழநாடு'வுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியாவில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகள் அண்மைக் காலமாக மன்னாருக்கு கடல்மார்க்கமாக வருவது அதிகரித்துள்ள நிலையில், இவ்வாறு வந்தவர்களில் யாராவது தவறிக் கடலுக்குள் வீழ்ந்திருக்கலாமெனவும் செய்திகள் தெரிவித்தன. (201)

### திருமலை...

எமது போராட்ட வரலாற்றிலே போரியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் கடல்வளம் முக்கியமானது. கடந்த கால யுத்தத்தின் போதும், தற்போதைய சமாதான சூழலிலும் கடற்தொழிலாளர்களே தமது பொருளாதார வளத்தினை இழந்து வருகின்றனர்.

கடலை நம்பிவாழும் எமது மக்களது பொருளாதாரத்தை வளர்த்தெடுக்கவே நாம் இடைக்கால நிர்வாகத்தைக் கோரியுள்ளோம்.

கடற் தொழிலாளர்களது பொருளாதார வளத்தினைக் கட்டியெழுப்ப தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மாலான ஒத்துழைப்பினை வழங்குவார்கள் எனத் தெரிவித்தார். (10,04)

### யாழ்.தளபதியாக...

யாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் இன்று யாழ்ப்பாணத்தில் தனது கடமையை பொறுப்பேற்க வருகிறார்.

1951 ஆம் ஆண்டு பிறந்த சுனில் தென்னக்கோன் 1971 ஜூலை 24 ஆம் திகதி இராணுவத்தில் இணை அதிகாரியாக இருந்தார். 1972 ஒக்ரோபரில் ஆட்டிலறிப் படைப் பிரிவில் 2 ஆம் லெப்ரினன்ட் தர அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு இராணுவ நடவடிக்கைகளிலும் சுனில் தென்னக்கோன் முக்கிய பங்கு வகித்தார்.

1991 இல் ஆனையிறவை மீட்பதற்கான பலவேகய, 1992 இல் வன்னிவிக்கிரம உள்ளிட்ட பல்வேறு படை நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்த சுனில் தென்னக்கோன்

1997 இல் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக பொறுப்பேற்றார். இதே காலப் பகுயில் இவர் இராணுவப் பொலிஸாராகவும், பதவி வகித்திருந்தார்.

1998 இல் இராணுவப் பேச்சாளராக நியமிக்கப்பட்ட சுனில் தென்னக்கோன் பின்னர் 23 ஆவது டிவிசனின் பொதுக்கட்டளை அதிகாரியாக மட்டக்களப்பில் பணியாற்றினார்.

பாகிஸ்தான் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் கற்கை நெறியை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் இவரை அரசாங்கம் 22 ஆவது டிவிசனின் பொதுக் கட்டளை அதிகாரியாக திருகோணமலையில் நியமித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# காணாமற் போன ஆசிரியர் கிளிநொச்சியில் உள்ளார்!

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க்குச் சென்ற வேளையில் காணாமற்போனதாகத் தெரிவிக்கப்பட்ட ஆசிரியர் ஒருவர் கிளிநொச்சியில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குப்பிழான் ஏழாலையைச் சேர்ந்தவரும் கிளிநொச்சி பாரதிபுரம் மகா வித்தியாலய ஆசிரியருமான மாணிக்கம் ஜெகதீஸ்வரன் என்பவர் கடந்த திங்கட்கிழமை கோப்பாய்க்கு சென்று வருவதாகக் கூறிச்சென்றதாகவும் பின்னர் இண்டு நாட்களாக வீடு திரும்பவில்லை எனவும் அவரது சகோதரியான விக்னேஸ்வரி யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டிருந்தார்.

ஆனால் குறிப்பிட்ட ஆசிரியர் கிளிநொச்சி பாரதிபுரம் மகாவித்தியாலயத்தில் தங்கியிருப்பதாக பாடசாலை அதிபர் கிளிநொச்சியில் உள்ள வடகிழக்கு மனித உரிமைகள் அலுவலகத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இவரது உறவினர்களை கிளிநொச்சியில் உள்ள வடகிழக்கு மனித உரிமைகள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### சட்ட நடவடிக்கைக்கு...

எந்தவிதத்திலும் சம்பந்தப்படப் போவதில்லை.

ஆயினும், இறுதித்தீர்வு ஒன்றுக்கான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்தால் மாத்திரமே ஜே.வி.பி பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும்.

ஜனாதிபதியினால் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்த மாகாணங்கள் இரண்டையும் ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகள் தொடர்கின்றது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்த இணைப்பை நீடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாத வேளையில் இவ்வாறான அறிவித்தல்கள் சட்டவிரோதமானவை என்று ரில்வின் சில்வா மேலும் தெரிவித்தார்.

### வெளிநாட்டு...

கிரியைகள் நேற்று கொழும்பில் இடம்பெற்றன. ஈ.பி.டி.பி தலைமையகம் அமைந்துள்ள ஹவ்லொக்ர[illegible] பார்க் வீதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விசேட மோட்டார்சைக்கிள் கொமாண்டோக்கள் மற்றும் பொலிஸாரும் பெருமளவில் பாதுகாப்புக் கொடுத்தனர்.

# கண்காணிப்புக் குழுவினரின்...

புலிகளின் ட்ரோலர் படகினை அவதானித்த கடற்படையினர், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சகிதம் அதனைச் சோதனையிட முயன்றனர்.

ஆனால், அதற்குக் கடற்புலிகள் மறுப்புத் தெரிவித்ததையடுத்து, படகு மீண்டும் திருப்பியனுப்பப்பட்டிருந்தது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி குறித்த கப்பலைச் சோதனையிடுவதற்கு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குப் போதிய அதிகாரம் உள்ள நிலையில், இந்தச் சம்பவம் குறித்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மௌனம் சாதித்து வருகின்றமையை ஏற்கமுடியாதெனவும் தேசிய பாதுகாப்புச் சபை தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லவுள்ளதாகவும் தெரிவித்துள்ள தேசிய பாதுகாப்புச் சபை, இந்தச் சம்பவம் தொடர்பாக நேர்வேத் தரப்புக்கு உடனடியாக அறிவிக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, திருமலைத்துறை முகத்தைச் சூழ அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம்கள் தொடர்பான விசாரணை அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் வழங்குமாறு கேட்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்றுவதற்கும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தவறிவிட்டதாகவும் தேசிய பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில், குறித்த கடற்புலிக் கப்பலைச் சோதனையிடுவதற்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தவறியமை குறித்து சிறிலங்கா ஜனாதிபதி கடுமையான விசனம் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

## ஒலிம்பிக் பதக்க விபரம்



| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 14 | 9 | 5 | 28 |
| ஐக்கிய அமெரிக்கா | 13 | 11 | 9 | 33 |
| ஜப்பான் | 9 | 4 | 2 | 15 |
| அவுஸ்ரேலியா | 6 | 5 | 7 | 18 |
| உக்ரெயின் | 5 | 1 | 1 | 7 |
| இத்தாலி | 4 | 5 | 3 | 12 |
| பிரான்ஸ் | 4 | 3 | 4 | 11 |
| ஜேர்மனி | 4 | 2 | 7 | 13 |
| ரஷ்யா | 3 | 7 | 9 | 19 |
| தென்கொரியா | 2 | 6 | 3 | 11 |
| நெதர்லாந்து | 2 | 4 | 4 | 10 |
| கங்கேரி | 2 | 3 | 1 | 6 |
| ருமேனியா | 2 | 0 | 2 | 4 |
| கிறிஸ் | 2 | 0 | 1 | 3 |
| துருக்கி | 2 | 0 | 1 | 3 |
| போலந் | 1 | 2 | 1 | 4 |
| ஸ்லோவாக்கியா | 1 | 2 | 1 | 4 |
| பலாரஸ் | 1 | 1 | 1 | 3 |
| ஜோர்ஜியா | 1 | 1 | 0 | 2 |
| தென்ஆபிரிக்கா | 1 | 1 | 0 | 2 |
| டல்கேரியா | 1 | 0 | 2 | 3 |
| தாய்லாந்து | 1 | 0 | 2 | 3 |
| சுவிற்சர்லாந்து | 1 | 0 | 1 | 2 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | 1 | 0 | 0 | 1 |


# வேலை வாய்ப்பு

தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சியைப் பூர்த்திசெய்த தொழில்சார் சான்றிதழுடையவர்களுக்கும் ஏனைய தொழில்நுட்ப வல்லுனர்களுக்கும்

வடக்கு - கிழக்கு துரித அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் கட்டட நிர்மாணம், பாலம் அமைத்தல், நீர்ப்பாசனம், நெடுஞ்சாலைகள் அமைத்தல் ஆகிய துறைகளில் வேலைவாய்ப்பு வழங்குவதற்கான நேர்முகத்தேர்வு

நேர்முகத் தேர்வு நாளை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் நடை பெறவுள்ளது. உடனடி வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில் வழங்கப்படவுள்ளதால் தகைமையுடையோர் சான்றிதழ்களுடன் நாளை சமூகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்
என்.யோகராஜன்
அதிபர்,
யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி.2954)



# நமது ஈழநாடு விளம்பரக் கட்டணங்கள்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூபா 10,000 | ரூபா 22,000 |
| அரைப்பக்கம் | ரூபா 5,000 | ரூபா 12,000 |
| கொலம் செ.மீ Colum cm | ரூபா 50 | ரூபா 120 |

# மரண அறிவித்தல்

7cm x 2 கொலம் (colum) அளவுடைய மரண அறிவித்தல் விளம்பரங்கள் இலவசமாகவே பிரசுரிக்க ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு மேற்பட்ட அளவுக்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.